பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 29 செவ்வாய்க்கிழமை (13.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:048

# இந்தியா உடனடியாக தலையிடாவிடில் இலங்கையில் தமிழர்கள் அழிவர்!

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழகத்தில் விவரிப்பு

சென்னை, ஜனவரி13

**இலங்கையில் அரசாங்கம் நடத்தும் போரை நிறுத்துவதற்கு இந்தியா தலையிட்டு உதவ வேண்டும்.இல்லையேல் அங்கு வாழும் தமிழர்கள் நிச்சயம் அழிவர்.**

**ஆகையால் அங்கு போரை நிறுத்துவதற்கு இந்தியா தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசிடமும், மத்திய அரசிடமும் வேண்டுகின்றோம்.**

இவ்வாறு சென்னையில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் கூட்டாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் மாவை. சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மனோகணேசன் வாகன விபத்தில் சிறுகாயங்களுடன் தப்பினார்

கொழும்பு, ஜன. 13

ஜனநாயக மக்கள் முன்னணி, ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய அமைப்புகளின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் பயணம் செய்த மொண்டாரோ ஜீப் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் அவிசாவளையில் விபத்துக்குள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முகர்ஜி அடுத்த மாதம் வருவார்

கொழும்பு, ஜன-13

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி அடுத்தமாதம் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வருகிறார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

பிராந்திய மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், இலங்கைப் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுப் பகுதியில் நேற்று வான் தாக்குதல்கள்

கொழும்பு, ஜன. 13

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, இரணைமடுப் பகுதி மீது நேற்று விமானப்படையினரின் ஜெற் மற்றும் எம்.ஐ.24 ரக ஹெலிக் கொப்டர்கள் தாக்குதல்களை நடத்தின.

இரணைமடுவிற்கு தென்கிழக்கே சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப்புலிகள் ஒன்றுகூடும் தளம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் நேற்று யாழ். வந்தார்




பிரிட்டனின் பிரதித் தூதுவரும், அரசியல் அதிகாரியும் ஆசிரியர்பீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

யாழ்ப்பாணம்,ஜன.13

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் மார்க் குடிங் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் மனிதாபிமான நிலைமைகள், பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆராய்வதே அவரது விஜயத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்ட யாழ். கட்டளைத் தளபதி, யாழ். ஆயர் மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் தலைவர் கள் ஆகியோரை இவ்விஜயத்தின்போது மார்க் குடிங் சந்திக்கவுள்ளார்.

அகதி முகாம்களுக்கும், நல்லூர் கந்தசுவாமி ஆலயம் மற்றும் யாழ். பொது நூலகம் ஆகியவற்றிக்கும் பிரதித் தூதுவர் நேற்றுச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் வன்னியில் பொதுமக்கள் பாதிப்பு

கொழும்பு, ஜன-13

முல்லைத்தீவு, புதுகுடியிருப்பு, விசுவமடு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, வட்டக்கச்சி பகுதிகள் மீது நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலில் 12 பேர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

அன்றையதினம் விசுவமடு தேரவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 8 பேர் படுகாயமடைந்தனர்.

அதேவேளை கண்டாவளை பிரமந்தனாறு பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தக் கோரி மன்மோகன், சோனியாவுடன் மீண்டும் கலைஞர் பேசுவார்

சென்னை, ஜன. 13

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை உடன் முடிவுக்குக் கொண்டு வந்து அங்கு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கையும், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியையும் தாம் மீண்டும் நேற்று வலியுறுத்தவிருந்தார் எனத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்றுக்காலை அறிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் ஆகிய மூவரும் நேற்றுக் காலை தமிழக முதல்வரைச் சந்தித்து இலங்கை நிலைமை குறித்துப் பேசியதை அடுத்தே இந்த அறிவிப்பைத் தமிழக முதல்வர் விடுத்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் இருந்து 236 பேர் கொடிகாமத்துக்கு இடம்பெயர்ந்து வந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 13

வடமராட்சி கிழக்கு- உடுத்துறை, வெற்றிலைக் கேணிப் பகுதிகளில் இருந்து 286 பேர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கொடிகாமத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் அருகில் உள்ள வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கான உணவு வசதிகளை தென்மராட்சி லயன்ஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லஸந்தவின் இறுதி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர்

கொழும்பு, ஜன. 13

சுட்டுக் கொல்லப்பட்ட 'த சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் இறுதிக்கிரியை நேற்று மாலை பொரளை கனத்தை மயானத்தில் இடம் பெற்றது.

இறுதி நிகழ்வில் எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள், பொது மக்கள் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட பொதுமக்களும் அரசியல் (12 ஆம் பக்கம் பார்க்க)

North Lanka IIT

New College of Higher Studies, Ariyakulam Junction, Jaffna.

மேலதிக விபரங்கட்கு 0602214305

நீங்கள் மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2009 இனை தவறவிட்டவரா?

உங்களுக்காகவே Special Offer!!

பொங்கல் தினத்தில் பதிவு செய்பவருக்கு

பதிவுக் கட்டணம் ரூபா 10000.00 முற்றிலும் இலவசம்!!!!

14-01-2009 11:00 மணியிலிருந்து 2:00 மணிவரை மட்டுமே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து

## மரக்கறி வகைகள் விற்பனை

தற்போதைய மரக்கறித் தட்டுப்பாடு நிலைமையை கருத்தில் எடுத்து தம்புள்ளவில் இருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட உடன் மரக்கறிகளான பட்டர் போஞ்சி, பச்சை போஞ்சி, தக்காளிப்பழம், கரட், கத்தரிக்காய், பச்சைமிளகாய் போன்ற பொருள்கள் சகல கிளை விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு நகர்க்கடைகளிலும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன.

மேற்படி பொருள்கள் விசேட வைபவங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள் போன்றவற்றிற்கு தேவையானவர்கள் தங்களது தேவைகள் குறித்து முன்கூட்டியே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்.

## தவறிவிட்டது

வழி இல, 788, இளவாலை பண்டத்தரிப்பு ஊடாக யாழ்ப்பாணம் வரும் மினிபஸ் வண்டியில் தங்கப்பவுண் வார்ப்புக் கட்டி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளம் கொண்டு தயவு செய்து "கார்த்திகா நகைப் பூங்கா" கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## தவறிவிட்டது

முருகமூர்த்தி வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரியுடைய செல்வி கௌரிஷா ஈஸ்வரநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (887502196V) கடந்த 08.01.2009 வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள ரொசேன் ஸ்ரோஸில் அல்லது அம்பாள் அரைக்கும் ஆலை, மத்திய மகாவித்தியாலய வீதி என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். ஒப்படைப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிர்காமநாதன் கோணேஸ்வரி

பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோணேஸ்வரி கதிர்காமநாதன் நேற்று (12.01.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கயிலாயபிள்ளை - பகவதிதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் திலீபன், சுகிர்தன் ஆகியோரின் அருமைத் தாயாருமவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

45, நாவலடி லேன்,
கேசாவில் பிள்ளையார் வீதி,
வண்ணார்பண்ணை. (81771)

தகவல்:
மருமக்கள்: சத்தியவண்ணர்,
பாஸ்கரன் (சிவா).

### கதிரவேலு அசோக்குமார்



காரைநகரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்தவருமான கதிரவேலு அசோக்குமார் (08.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளியம்மை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவரான வரதராசா (ஆசிரியர்) மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் கோகிலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அம்பலவாணர், Dr.புத்மராணி, Dr.ரவிராஜ் (லண்டன்), Dr.நவராணி, Dr.புவனேந்திரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவராசா (அவுஸ்ரேலியா), சுசீலா, தேவகி (மூளாய் வைத்தியசாலை), துரைராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.01.2009) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்ணாகம், சுழிபுரம். (81766) துரைராசா (மைத்துனர்).

### திருமதி நீற்றா அன்ரனி



கரம்பனைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, தபால் கந்தோர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா அன்ரனி நேற்று (12.01.2009) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பி.ஜே. அலோசியஸ் (கரம்பன்) மற்றும் பிரான்சிஸ்கா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சவரிமுத்து சின்னத்துரை மற்றும் திருமதி செலஸ்தீனா சவரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் அன்ரனியின் (மாமா) அன்பு மனைவியும் ஜெசிந்தா, இமல்டா, யஸ்ரீன், டன்ஸ்ரன், லசிலா, ஒஸ்ரின், அனிற்ரா, ஒலிவர், அன்ரிடா, பவுஸ்ரின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சேவியர் (Kopay Glass Factory), அஞ்சலினா, வுளோறா, அசெம்ரா, ஜசிந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் பொறளை ஜெயரத்தன மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய்.
T.P. 077 7248709 (சி/556643)

தகவல்:
அன்ரனி
(மாமா - கணவர்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரியின் விரிவுரையாளர்
திரு.க.இரட்ணேஸ்வரன் அவர்களின் அன்புத்
தந்தையார் மருதர் கதிர்காமு அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

பீடாதிபதி, உபபீடாதிபதிகள்,
விரிவுரையாளர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை கந்தசாமி

பருத்தித்துறை, புலோலி கிழக்கு கிராமக்கோட்டடியை பிறப்பிடமாகவும் தற்போது அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியை, புற்றளை ம.வி) (11.01.09) ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வித்துவான் S.R. கந்தசாமியின் அன்பு மனைவியும் மணிவண்ணனின் (அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும் பராசக்தியின் அன்பு மாமியாரும் இரமணன், இராதை ஆகியோரின் பேர்த்தியாரும் மகேஸ்வரி (லண்டன்), ஆறுமுகம் (கனா), சண்முகநாதன், பூபாலசிங்கம் (லண்டன்), சச்சிதானந்தம், காலஞ்சென்ற சிவஞானம், ஈஸ்வரச்சந்திரன் (U.S.A) கமலாம்பிகை (லண்டன்), கணேஸ்வரி (அவுஸ்திரேலியா) இலக்குமிதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.01.09) வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/556645)
திருகோணமலை

தகவல்:
கந்தையா சண்முகநாதன்.

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பிரதம முகாமைத்துவ
உதவியாளர் சு.சுந்தரேஸ்வரன் அவர்களது
அன்புத் தந்தையார்

### நாகலிங்கம் சுந்தரம்

அவர்கள் 10.01.2009 சனிக்கிழமை காலமாகியதையிட்டு அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை. (சி/556640)

ஊழியர்
நலன்புரிச்சங்கம்.

## இன்று இரத்ததானம்

கோப்பாய்,
ஜன.13

கோப்பாய் மனிதம் இந்து இளைஞர் கழகம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இன்ரறக்ட் கழக அனுசரணையுடன் இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் இரத்த தான முகாமை நடத்தவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்களை சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1-72)

## தவிக்கின்றோம் பிரிவு கண்டு நெஞ்சம் விம்மி



யாழ். இந்து ஆரம்ப பாடசாலையென்னும் பெயரினைப் பொறித்து
தனித்துவமான பாடசாலையாக உருவாக்கி
01.01.1973 - 15.06.1985 வரை அதிபராகக் கடமையாற்றி
ஓய்வுபெற்று லண்டனில் வசித்த எமது அன்புக்குரிய பாடசாலை
அன்னையின் கோமகன்

### அமரர் செ.கனகரட்ணம்

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு எமது சமூகத்தின்
கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

எண்ணரிய முயற்சியினால் எழிலா யாழிந்து
ஆரம்ப பள்ளியெனும் நாமம் சூட்டி
கண்ணரிய சொத்தாகக் கருணை நெஞ்சில்
கனிந் தொழுகத் தனித்துவத்தின் வித்தாயென்றும்
மண்மகிழ வோர்பள்ளி உருவாக்கி யத்ன்நிழலில்
மாசற்ற அதிபரெனும் அணைப்பில் பன்னீராண்டு
தன் மகிமை பேசவைத்த கனகரட்ணமையா
தவிக்கின்றோம் பிரிவுகண்டு நெஞ்சம் விம்மி

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பழைய மாணவர் சமூகம்.

## மரண அறிவித்தல்



### துரைராஜா கணேசன்

(சுவிஷேச பாடகரும் பியானோ இயக்குநரும்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் 261/7, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா கணேசன் நேற்று முன்தினம் (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் துரைராசா மற்றும் காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியினரின் மூத்த புதல்வனும் திலகராணியின் அன்புக் கணவரும் கமலாம்பிகை, மரியதாஸ் (டோகா), காலஞ்சென்றவர்களான ஞானதாஸ், ஞானமலர் மற்றும் ஞானசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் விமலராணி சிவம், மகேந்திரன், தெய்வேந்திரன், கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை ஊழியர்கள், போதகர்கள், விசுவாசிகள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

261/7, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (81767)

தகவல்:
திலகராணி (மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஊடக அடக்கு முறை குறித்து சந்திரிகா எழுப்பும் கேள்வி

'த சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலை மற்றும் எம்.ரி.வி., எம்.பி.ஸி. கலையகம் மீதான தாக்குதல் போன்றவற்றுக்கு அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆயுதக்குழுவொன்றே காரணம் என எதிர்க்கட்சிகள் தரப்பில் முக்கிய பிரமுகரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர அப்பட்டமாக - வெளிப்படையாக - குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

லஸந்தவின் படுகொலைக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் லஸந்த படுகொலை, எம்.ரி.வி. மீதான தாக்குதல், 'உதயன்' அலுவலகம் மீதான தாக்குதல் போன்றவை அரசுப் படைகளின் வெற்றியை மூடி மறைத்துப் புறம் ஒதுக்கும் சதித் திட்டத்துடன் சில சக்திகளால் முன்னெடுக்கப்பட்ட நாசவேலைகள் எனக் குறிப்பிட்டு, அச்சம்பவங்களுக்கும் அரசுக்கும் தொடர்பில்லை என்ற பாணியில் விளக்கமளித்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அவரின் இந்த விளக்கத்தை ஒட்டி இப்பத்தியில் நாம் எழுப்பிய அதே கேள்வியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இப்போது எழுப்பியிருக்கின்றார்.

''தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவர் பிரபாகரனையும் இந்த அரசால் அடக்க முடியும் என்றால் கொழும்பு உள்ளிட்ட தென் பிரதேசங்களில் செயற்படும் இத்தகைய கொலையாளிகள் சிலரை அரசால் பிடிக்கவோ அடக்கி ஒடுக்கவோ முடியாதமை ஏன்?'' - என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் சந்திரிகா குமாரதுங்க.

கடந்த இரு வருடங்களில் நாட்டில் அதிகமான ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். பலர் தாக்கப்பட்டிருக்கின்றனர். பலர் இதனால் நாட்டை விட்டு ஓடும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''அவர், இவர், சர்வதேச சதித்திட்டம்......... என்றெல்லாம் இவ்விடயங்களுக்கு ஒவ்வொருவரையும் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசிற்குரியது என்பதைப் பன்னிரண்டு வருடங்களாக நாட்டை நிர்வகித்தவர் என்ற வகையில் கூறுகிறேன். இன்று நாடு படுகுழியில் விழுவதற்கு அரசு இடமளித்திருக்கின்றமை குறித்து நான் கவலைப்படுகின்றேன்.'' - என்று நெற்றியடி கொடுப்பது போன்று கருத்து வெளியிட்டிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி குமாரதுங்க.

இக்கருத்தை அவர் கூறுவதற்குத் தகுதியுடையவரா என்பது சர்ச்சைக்குரியதே.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் காலத்தில் ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஸா போன்ற பிரமுகர்கள் படுகொலை செய்யப்பட்டு, ஊடகங்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட இருண்ட யுகம் ஒன்று கவிந்திருந்தது. அந்த இருட்டில் இருந்து நாட்டை விடுவித்த முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அதிக பங்கிருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது. இன்று ஜனாதிபதியாக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ கூட அன்று, மனித உரிமைகளுக்காகக் குரல் எழுப்பி அந்த முயற்சியில் பங்காற்றியவர் என்பது வேறு விடயம்.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் கூட அவரது அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக 'த சண்டே லீடர்' ஆங்கில வார இதழும், 'உதயன்' நாளிதழும் காட்டமாக எழுதின. அவரையும், அவரது அரசையும் கடுமையாக விமர்சிக்க அவை தவறவில்லை. அதற்காக அவை தாக்கப்படவில்லை.

ஆனால், அந்தப் பத்திரிகைகளுக்கு எதிராக சந்திரிகாவின் அரசு நடவடிக்கை எடுக்காமலும் இருக்கவில்லை. 2000 ஆம் ஆண்டு மே மாதம் அவரது அரசு முதலில் 'உதயன்' பத்திரிகையையும் பின்னர் 'த சண்டே லீடர்' வார இதழையும் சீல் வைத்து மூடியது. ஆனால் அது சட்ட ரீதியான நடவடிக்கை. அந்த அடக்கு முறையை சட்ட ரீதியாகவே எதிர்கொண்டு, முறியடித்து, ஆறுவார காலத்துக்குள் நீதிமன்ற அனுமதியோடு உதயனும், த சண்டே லீடரும் மீண்டும் வழமைபோல வெளிவந்தன.

ஆனால் இன்றோ உதயன் அலுவலகத்துக்குள் ஆயுததாரிகள் புகுந்து தாக்குதல் நடத்தும் நிலையும், 'த சண்டே லீடர்' ஆசிரியர் பட்டப்பகலில் நட்ட நடு வீதியில் படுகொலை செய்யப்படும் வன்முறைக் கலாசாரமுமே காணப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் -

மேற்படி வன்முறைகளின் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் கொண்டு வர இயலாத இந்த அரசின் போக்குக் குறித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுப்பும் கேள்வியில் நியாயம் இருக்கவே செய்கின்றது.

எனவே, இத்தகைய கொடூரச் செயல்களின் சூத்திரதாரிகளை - அல்லது சக்திகளை - அம்பலப்படுத்தி, சட்டத்தின் முன் நிறுத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியமை போன்று இந்த அராஜகங்களுக்கான தொப்பி அரசின் தலையில் விழுவதைத் தவிர்க்க முடியாது.

# ஈழத்தமிழர்களின் இறைமையை அங்கீகரிக்கும் தீர்வுக்காக தங்களின் அரசியல், தார்மீகப் பலங்களைப் பயன்படுத்துங்கள்

## தமிழக முதல்வரிடம் கிளிநொச்சி பொது அமைப்புகள் வேண்டுகோள்

கிளிநொச்சி, ஜன.13

ஈழத்தமிழர்களின் அரசியல் இறைமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுக்கு தங்களின் அரசியல் தார்மீக பலங்கள் அனைத்தையும் விரைந்து பயன்படுத்துங்கள்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

'மரணத்தின் வாசலில் நின்று ஈழத் தமிழர்களின் மனு' என்ற தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக சிங்கள ஆட்சியாளர்கள் ஈழத் தமிழர்களை அடிமை கொள்ள மேற்கொண்டுவரும் கட்டற்ற பயங்கரவாதம் குறித்து தாங்கள் நன்கு அறிவீர்கள். ஆகவே இது குறித்த விரிவான பதிவுகள் எவையும் அவசியமற்றவை என்பதாலும், ஈழத்தமிழர்களின் மூச்சோடு கலந்த உறவினன் தாங்கள் என்பதாலும் நேரடியாகவே எமது வேண்டுகோளை சமர்ப்பிக்கின்றோம்.

உலகில் இன ஒதுக்கலுக்கு உள்ளாகி அவலப்பட்ட இனங்களின் துயரங்களுக்கு மேலான மனிதப் பேரவலத்தை சிங்கள தேசம் எமது மக்களுக்கு வழங்கியுள்ளது. பயங்கரவாதத்தை ஒழிப்பதாக பறை சாற்றிக் கொண்டு, ஈழத் தமிழினத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்த்துவிட அது கங்கணம் கட்டிச் செயற்படுகின்றது. இன்று இன அழிப்பிற்கான சிங்கள ஆட்சியாளர்களின்போர் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஈழத்தமிழரைக் கொத்துக் கொத்தாக கொல்லவும் தமிழர் தாய்நிலத்தை கொழுந்துவிட்டு எரியவும் அது செய்கின்றது.

மிகமிகக் குறுகிய நிலப்பரப்புக்குள் 4 லட்சம் மக்களை அது குடிபெயர்த்து அகதிகளாக்கியுள்ளது. போர் விமானங்களின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் உலகின் பெரும் போர்களையே நினைவூட்டுகின்றன.

உணவின்றி, உடையின்றி, மருந்து வகை எதுவுமின்றி மக்களின் சாவு ஓலமே இங்கு எஞ்சி நிற்கின்றது. அரச பயங்கரவாதத்தின் உச்ச வெறித்தனம் வன்னி மண்ணின் வைத்தியசாலைகளை தாக்கி அழிப்பதில் வெளிப்படுத்தப்படுகின்றது. குஞ்சென்றும் மூப்பென்றும் பாராது மனித உயிர்கள் நொடிப் பொழுதில் சாகடிக்கப்படுகின்றது.

இரத்த வாடையும் பிண வாடையும் கலந்தே இங்கு காற்று வீசுகின்றது. குருதி சிந்தா மனிதரில்லை, குரு நிலமுமில்லை என விவரிக்கக் கூடிய நிலையில் மரணங்கள் மலிந்த பூமியாக ஈழ தேசத்தை சிங்கள அரசு உருவாக்கியுள்ளது.

அன்புக்குரிய முதல்வர் அவர்களே!

உலகத் தமிழினத்தின் பெரும் தலைவராகிய தாங்கள் ஒரு சில மணி நேரங்களில் ஈழத்தமிழர் தொடர்பில் எடுக்கும் தீர்மானமே ஈழத் தமிழரின் உயிர் காக்கும் அரசியல் தர்மமாக விளங்க முடியும். சிங்களத்தின் கர்ண கொடூரம் நடைபெறும் இம்மண்ணிலிருந்து உயிர் பாதுகாப்புக் கருதி மரணத்தின் வாசலில் நின்று தங்களுக்கு மனுச் செய்கின்றோம். ஈழத் தமிழரின் அரசியல் இறைமையை அங்கீகரிக்கும் அரசியல் தீர்வுக்கு தாங்கள் தங்களின் அரசியல், தார்மீக பலங்கள் அனைத்தையும் விரைந்து பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(50)

## கடந்த 3 மாதங்களில் மட்டும் மூவாயிரம் படையினர் பலி

கொழும்பு, ஜன.13

கடந்த 3 மாதங்களில் மட்டும் வன்னிக் களமுனைகளில் 3 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தகவல் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார ஏடான ஐலண்டுக்கு அமைச்சர் வழங்கிய செவ்வியிலேயே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து 3 மாதகாலப் பகுதியில் வன்னிக் களமுனைகளில் 3ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 15ஆயிரம் படையினர் கொல்லப்பட்டனர் என எதிர்க்கட்சி தெரிவிப்பது தவறு.

விடுதலைப்புலிகள் முல்லைத் தீவுப் பகுதியில் மட்டும் தற்போது நிலை கொண்டுள்ளனர். அவர்கள் வசம் 2 ஆயிரம் பேரே உள்ளனர். அவர்களை நாம் இலகுவில் வெற்றிகாண்போம் - என்றார்.

(202)

## பாராட்டு விழா

வடமராட்சி, ஜன.13

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் ஆ.ஜெகநாதன் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் இளைப்பாறிச் செல்கின்றார் அவருக்கு பழைய மாணவர் சங்கம் நடத்தும் பாராட்டு விழா எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிற்பகல் 1.30 மணிக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இப்பாராட்டு விழாவில் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

(202-236)

## இந்துசாதனம் அறிமுகவிழா நாளை

யாழ்ப்பாணம், ஜன.13

''இந்துசாதனம்''பத்திரிகையின் அறிமுகவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலனசபை உபதலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கலந்துகொள்வார்.

இந்துசாதனம் பத்திரிகையை யாழ். அரச அதிபர் க.கணேஷ் வெளியிட்டு வைக்கவுள்ளார். அதன் முதற்பிரதியை யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் வி.கணேசராஜா பெற்றுக்கொள்வார். வெளியீட்டுரையை கலாநிதி க.குணராசா நிகழ்த்துவார். இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியராக 'சிற்பி' சிவசரவணபவன் பணியாற்றுகின்றார்.

(201)

# ஐ.நா.சபையைக் கொண்டும் புலிகளை தடைசெய்துவிட அரசு தீவிர முயற்சி

கொழும்பு, ஜன.13

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஐ.நா.சபையைக் கொண்டும் தடை செய்வதற்கான முயற்சியில் இலங்கை அரசாங்கம் இப்போது தீவிரமாக செயற்படத் தொடங்கியுள்ளது.

சர்வதேச பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான ஐ.நா.சபையின் தீர்மானம் ஒன்றுக்கமைவாக தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்வித்து விடலாம் என்று அரசு கருதுவதாகத் தெரிகின்றது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்து ஐ.நா.பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய (1373) தீர்மானத்தில் சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்துவதற்கான உத்திகளையும் செயற்பாடுகளையும் வெளியிட்டிருந்தது.

வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஐ.நா. சபை ஒரு பயங்கரவாத இயக்கமாக பட்டியல் படுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இதைக் கருத்தில் கொண்டு உறுப்பு நாடுகளுடனும் ஐ.நா.சபையின் பல சபைகளுடனும் ஆலோசனைகள் நடத்தியுள்ளோம். இதற்கான அடிப்படை பணிகள் பூர்த்தியாகியுள்ளன. "இந்த வருட இறுதிக்குள் ஐ.நா.புலிகளை தடை செய்து விட வேண்டுமென்பது எங்கள் எண்ணம்'' என்று கூறினார்.

இந்த முயற்சி வெற்றிபெறுவதற்கு அமெரிக்கா உட்பட உலக நாடுகளில் புலிகள் புரிந்துள்ள பயங்கரவாத செயற்பாடுகளைத் தொகுக்க உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ப)

## நாளை

| | |
|---|---|
| தை1 | 14.01.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 02.50வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.ப.05.22வரை |
| சுபநேரம்: | 05.04 - 06.34 |
| ராகுகாலம்: | 12.34 - 02.04 |

## பாடசாலைக் கட்டடங்களில் இயங்கும் கிளி.,முல்லைத்தீவு வைத்தியசாலைகள்

கிளிநொச்சி,ஜன.13

படைநடவடிக்கைகளால் கிளிநொச்சி மருத்துவமனை இடம்பெயர்ந்து தற்போது பாடசாலைக் கட்டடங்களில் செயற்படத் தொடங்கியுள்ளதாகக் கிளிநொச்சிப் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை தற்போது தருமபுரத்திலும், விசுவமடுப் பாடசாலைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றது. வட்டக்கச்சி மருத்துவமனையோடு இணைந்து இயங்கிவந்த துணுக்காய் மருத்துவமனை இப்போது விசுவமடு புன்னை நீராவி பாடசாலையில், இயங்கத் தொடங்கியுள்ளது.

இதேபோன்று இடம்பெயர்ந்துள்ள பிரதேச மருத்துவமனைகளை வேறு பாடசாலைக் கட்டடங்களில் இயங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படாத வகையில் இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, முல்லைத்தீவு மாஞ்சோலையில் இயங்கிவந்த முல்லைத்தீவு மாவட்ட பொதுமருத்துவமனை இடம் மாற்றப்பட்டு வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய வளாகத்தின் ஒரு பகுதியில் நாளை மறுதினம் தொடக்கம் மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக முல்லைத்தீவு மருத்துவ அத்தியட்சகர் வீ.சண்முகராசா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய 54ஆவது ஆண்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நான்கு தினங்கள் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

முதலாம் நாள் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் சபையினால் நடத்தப்பட்ட சைவசமய பாடப் பரீட்சைகளில் அதிஉயர் புள்ளியைப் பெற்ற மாணவி ஒருவருக்குத் தங்கப்பதக்கம் அணிவிப்பதை முதலாவது படத்திலும் -

இரண்டாவது நாள் நிகழ்வில் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன ஆன்மீக அன்பர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அருளுரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு காட்சியை மூன்றாவது படத்தில் காணலாம். *(படங்கள்: தர்னிகா)*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.கே.பி.ஆனந்தநடேசன்

(முகாமையாளர் யாழ்.அதிமேற்றரக் கிளை, இலங்கை வங்கி)



எமது வித்தியாலயத்தின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவரும், இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் முன்னாள் முகாமையாளருமான *திரு.கே.பி.ஆனந்தநடேசன்* அவர்கள் இலங்கை வங்கியின் யாழ்.அதிமேற்றரக் கிளை முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் இன்னும் பல பதவி உயர்வுகளையும் சிறப்புகளையும் பெற இறையருள் ஆசியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**வேலாயுதம் மகாவித்தியாலயம்,**
**பருத்தித்துறை.**

(ஜி/556630)


## கூத்து, நடன நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.13

வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தில் தைப் பொங்கல் தினத்தன்று பிற்பகல் 2 மணிக்கு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களின் , சிந்து நடைக்கூத்து, தென்மோடிக்கூத்து மற்றும் நடன நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.கயிலாய நாதனின் அனுசரணையுடன் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (201)


## முதலாம் ஆண்டு நினைவு நாள்

### செல்லப்பா குமாரசாமி

மலர்வு 04.08.1947

உதிர்வு 13.01.2008



ஆண்டொன்று சென்றது அப்பா! ஆறவில்லை எம் துயரம்
அன்போடு எமைக்காத்து பண்போடு வளர்த்தீர்!
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மறையாது உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு
நாமிருக்கும் வரை என்றும் உங்கள் நினைவுகளுடன்...

*3, நல்லூர் குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.* *(81758)* **குடும்பத்தினர்.**


## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை திரேசம்மா (பிள்ளை)



யாழ்.ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை திரேசம்மா நேற்று (12.01.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் (பொன்ட் சலூன் உரிமையாளர்) அன்பு மனைவியும் றெஜீனா (கீதா), றொபேட் ரவீந்திரன், அன்ரனி (குட்டி), வினிஸ்ரன் (டெஸ்டா) ஆகியோரின் அன்புத் தாயும் றொபேட், விஜிதா, சந்திரா ஆகியோரின் அன்பு மாமியும் அமில்டன், ஜெரோம், டொறின்டன், அன்றிகா, ஒர்லினா, றெபேக்கா, வெரோணிக்கா ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்றவர்களான ராசையா, மரியம்மா, பொன்னம்மா, சவினம்மா, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சொர்ணம்மாவின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**றொபேட்** *(மருமகன்).*
*021 222 9321*

*209, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* *(81753)*

### திருமதி சிற்பராசக்தி ஸ்ரீஸ்கந்தராசா

**(இளைப்பாறிய உப - அதிபர், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)**

நவிண்டில், கரணவாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் இல.11, மூர் வீதி, தெஹிவளை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிற்பராசக்தி ஸ்ரீஸ்கந்தராசா 12.01.2009 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணபிள்ளை - வேதநாயகி தம்பதியரின் புத்திரியும் குரும்பகட்டி, புலோலியைச் சேர்ந்த வேலாயுதம் தம்பதியரின் மருமகளும் ஸ்ரீஸ்கந்தராசா (முன்னாள் ஆளணி முகாமையாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை, காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் கமலதர்சினி (ஆசிரியை, முஸ்லிம் மகாவித்தியாலயம், தெஹிவளை), சிறீபரன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும் காண்டீபன் (பணிப்பாளர் - நிதி, இந்து கலாசார அமைச்சு), சயந்திகா (ஆசிரியை, அராலி அரச தமிழ்க் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் டாக்டர் யோகீஸ்வரதேவன், பத்மாதேவி, புஸ்பரதி, ஸ்ரீதரன் (கனடா), காலஞ்சென்ற நித்தியானந்தசிவம் (இ.போ.ச.) ஆகியோரின் சகோதரியும் இரத்தினசிங்கம் (ஜே.பி., இளைப்பாறிய கிராம தலைமைக்காரன்), ஸ்ரீஸ்காந்தசிங்கம் (நில அளவையாளர்), மீனலோசனி, விமலரதி, புனிதவதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெறும்.

*"தேவ வில்லா",*
*நவிண்டில், கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

*தகவல்:*
**Dr.எம்.யோகீஸ்வரதேவன்.**


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சை - 2007**

**பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி - II**
**- *2004 & 2005* (வெளிவாரி)**
**செய்முறைப் பரீட்சை (EX.DTAG.3.2) நாடகமும் அரங்கியலும்**

மேற்படி தேர்வுக்கான செய்முறைப் பரீட்சையை 31.01.2009 (சனிக்கிழமை) மற்றும் 01.02.2009 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் காலை 8.30 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள், பரீட்சை தொடர்பாக ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், செய்முறைப் பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு:* செய்முறைப் பரீட்சை முடிந்ததும், பரீட்சை அனுமதி அட்டையை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதில் பதிவாளர்.**
12.01.2009. *(சி/556636)*


## நல்லூரில் இலவச பண்ணிசை வகுப்பு

நல்லூர்,ஜன.13

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச பண்ணிசை வகுப்புகள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் என இந்து விவகார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி வகுப்பில் இருபாலாரும் கலந்துகொள்ளலாம் எனவும் பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், விவரங்களை நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பதிவுசெய்துகொள்ளுமாறும் திருமதி மகிந்தினி கேட்டுள்ளார். (202-111)

## விபத்தில் ஒருவர் காயம்

வலி.வடக்கு,ஜன.13

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமுற்று மயங்கிய நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணிக்குச் சுன்னாகம், காங்கேசன்துறை வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

விபத்தில் சைக்கிளில் சென்ற சுமார் 65 வயது மதிக்கத்தக்க வயோதிபர் தலையில் பலத்த காயத்திற்கு உள்ளாகினார்.

தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட வயோதிபர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (202-186)

## திருத்தி வாசிக்கவும்

உதயன் 12.01.2009 திகதிய பத்திரிகையில் 6ஆம் பக்கத்தில் வெளியான அமரர் அண்ணாமலை மகர்தேவன் தொடர்பான நினைவஞ்சலி விளம்பரத்தில் "அன்னையிடம் (கரவெட்டி) 07.12.1933" என்பதில் 1933 என்று இருப்பது தவறாகும். அதனை 07.12.1930 என்று திருத்தி வாசிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


## Vacancy

The HALO Trust is
seeking an experienced
auto- electrician.
Must have experience of heavy
vehicles and plant.

## வெற்றிடம்

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்துக்கு
அனுபவமுள்ள
**ஆட்டோ இலத்திரனியலாளர் ஒருவர்**
தேவைப்படுகின்றார். கனரக வாகனம்
மற்றும் சாதனங்கள் தொடர்பான அனுபவம்
இருப்பது அவசியம்.

***Programme Manager.***

(81754)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.நகருக்கு நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்த பிரித்தானிய பிரதித் தூதுவர் மார்க் குடிங் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடு செய்வதை முதலாவது படத்திலும் தூதுவரும் அவரது உதவியாளர்களும் ஆலய முன்றலில் வந்து கொண்டிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர் நூலகப் பகுதியையும் புத்தகங்களையும் பார்வையிடுவதை மூன்றாவது, நான்காவது படங்களில் காணலாம்.

(படங்கள்:லக்ஷ்மன்)

# யாழ்.மாநகரசபை எல்லைப் பகுதியில் கிணறுகள் இறைக்கும் பணி துரிதகதியில்

நல்லூர், ஜன.13

யாழ்.மாநகர சபை, கிணறுகள் இறைப்பதற்கென விண்ணப்பித்தவர்களின் கிணறுகளை இறைக்கும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தியுள்ளது. நேற்றுத் திங்கட்கிழமை வரை கிணறுகள் இறைப்பதற்கென 186 விண்ணப்பங்கள் வந்துள்ளன எனவும் 90 கிணறுகள் இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டுள்ளன எனவும் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

குளங்களுக்கு அண்மித்ததாக உள்ள கிணறுகள் தற்சமயம் இறைக்கக்கூடியதாக இல்லை எனவும் ஏனைய கிணறுகளே இறைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிணறு இறைக்க விண்ணப்பித்தவர்கள் மண்ணெண்ணை, குளோறின் ஆகியவற்றை வழங்க வேண்டும். தினமும் 12 முதல் 15 கிணறுகள் வரை இறைத்துச் சுத்தம் செய்யப்படுவதாக ஆணையாளர் தெரிவித்தார். (203-111)

# பொங்கல் விழாக்கள்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் பொங்கல் விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சங்க வளாகத்தில் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பொங்கல் மற்றும் விசேட சமய வழிபாடுகள், சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன. (203-224)

* * *

யாழ்ப்பாணம், ஜன.13

சித்தங்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயத்தில் வருடாந்தத் தைப்பொங்கல் பெருவிழாவும் தீ மிதிப்பு வைபவமும் நாளை புதன்கிழமை காலையில் இடம்பெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு விசேட பூஜை அபிஷேகம் போன்றவை இடம்பெற்று நாககன்னியம்மன் நாகத்தில் திருவீதியுலா எழுந்தருளி தீ மிதிப்பு வைபவமும் இடம்பெறும்.

அன்றைய தினம் விசேட பஜனை, சொற்பொழிவு, வில்லுப்பாட்டு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (203-224)

* * *

யாழ்ப்பாணம், ஜன.13

கைதடி முதியோர் இல்லத்தில் நாளை காலை 8 மணிக்குப் பொங்கல் விழா ஆரம்பமாகி நண்பகல் வரை இடம்பெறும்.

பொங்கல் விழாவின்போது விசேட சமய வழிபாடும் இடம்பெறும். யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது. (203-224)

* * *

நல்லூர், ஜன.13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம், வலி.வடக்கு பிரதேசத்தில் நீர்வேலி இந்து இளைஞர் மன்றத்தில் நாளை புதன்கிழமை தைப்பொங்கல் விழாவை நடத்தவுள்ளது.

இந்து விவகார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நண்பகல் 12 மணிக்கு பொங்கல் விழா நடைபெறும். (203-111)

* * *

யாழ்ப்பாணம், ஜன.13

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தினர் நடத்தும் பொங்கல் விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள தென் இந்தியத் திருச்சபை பகல் பராமரிப்பு நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஜன.13

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை புதன்கிழமை அதிகாலை பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

காலை 7.30 மணிக்கு ஆன்மீக வழிகாட்டி சுவாமி லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (202)

# பொங்கல் வியாபாரம் களை கட்டியது

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.நகரில் பொங்கல் வியாபாரம் நேற்றுத் தொடக்கம் களைகட்டிக் காணப்படுகின்றது.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொங்கல் பொருள்களின் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

சர்க்கரை கிலோ 150 ரூபாவாகவும், பயறு கிலோ 173 ரூபாவாகவும், தீட்டல் பச்சை அரிசி கிலோ 120 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன் பிளம்ஸ், கஜு போன்ற பொருள்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேசமயம் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொங்கல் பொருள்கள் உள்ளடக்கிய பொங்கல் பொதி ஒன்றை 450 ரூபா வீதம் விநியோகித்து வருகின்றது. (203-224)

# நகரக் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் இலக்கத்தைத் தெளிவாக எழுத அறிவுறுத்து

நல்லூர், ஜன.13

நகரின் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்கான இலக்கங்களை தமது வீட்டின் முன்பாக தெளிவாக எழுதிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் குடியிருப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள சோலைவரிக்கான இலக்கமே குடியிருப்பாளர்களின் வீட்டு இலக்கம். இந்த இலக்கங்களை குடியிருப்பாளர்கள் தமது வீட்டு எல்லை மதில்களிலும் கேற்றுக்களிலும் பொறித்து விடவேண்டும். மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் தபால் ஊழியர்கள் சிரமமின்றி தமது கடமைகளைச் செய்வதற்கு இது அவசியம்- என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.(202-111)

# கூட்டம்

கோப்பாய், ஜன.13

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களின் பொதுக்கூட்டமும் பதிவுகளைப் புதுப்பிக்கும் நிகழ்வும் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (201-72)



யாழ்.சைவபரிபாலன சபைக்கு 'சித்தாந்தச்சைவச் சுடர் நிலையம்' என்னும் கௌரவ விருது வழங்கப் பட்டுள்ளது.

இந்த விருதை தென் இந்தியத் திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியுள்ளது. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பன்முகப் பட்ட சைவசமயப் பணிகளைச் செய்தமையைக் கௌரவித்தே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.சைவ பரிபாலன சபையின் சார்பில் அதன் தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம் திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வரிடமிருந்து விருதையும் பணமுடிப்பையும் பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

# மாவட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.சென்றலைட்ஸ் வி.க.சம்பியன்

வலி.வடக்கு, ஜன.13

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய கூடைப் பந்தாட்ட ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் (சொக்ஸ்) அணி சம்பியனாகியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக சொக்ஸ் அணியும் மோதிக் கொண்டன. போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை இரு அணி களும் சளைக்காது விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றன.

இரு அணிகளும் மாறிமாறி பந்துகளைப் போட்டு புள்ளிகளைப் பெற்றன. எனினும் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் தனது புள்ளிகளை சரியவிடாது முன்னிலையில் போராடியது.

முதல்பாதி ஆட்டத்தில் ஆட்டம் நிறுத்தப்படும் நேரத்தில் 42:34 புள்ளிகள் என்ற அடிப்படையில் சென்றலைட்ஸ் முன்னணியில் நின்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் புள்ளிகள் ரீதியாக முன்னேறியது. எனினும் ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் விறுவிறுவெனப் புள்ளிகளைப் பெற்று முன்னணிக்குச் சென்றது.

ஆட்ட நிறைவில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 81:64 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் குருத்துவக் கல்[illegible] கொண்டடி மசினெட் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்ட நிறைவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 50:36 புள்ளிகள் என்ற அடிப்படையில் டி மசினெட் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

டி மசினெட் விளையாட்டுக் கழகம் முதல் தடவையாக கூடைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டு 3ஆம் இடத்திற்கான போட்டி வரை முன்னேறியமையைப் பாராட்டி நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக சொக்ஸ் அணியைச் சேர்ந்த பிரசன்னாவும், ஆட்ட நாயகனாக ஜொலிஸ் ஸ்ரார் [illegible] கழகத்தைச் சேர்ந்த [illegible] தெரிவு செய்யப்பட்டனர். (202-86)

# பால் பொருள் உற்பத்திப் பயிற்சி

இணுவில், ஜன.13

பன்னாலை மாதர் அபிவிருத்திச் சங்கத்தினர் தமது பகுதியில் பால் உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு பசுப்பாலை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய ஏனைய பால் பொருள்கள் பற்றிய பயிற்சியொன்றினை தமது அங்கத்தவர்களுக்கு வழங்கி யுள்ளனர்.

ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்தினர் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாக அண்மையில் மகளிர் சங்க மண்டபத்தில் இப்பயிற்சி நெறி நடைபெற்றுள்ளது.

பால்பொருள் உற்பத்திப் பயிற்சிகளுடன், மாடு வளர்த்தல், பராமரித்தல், கால்நடைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களும் அதற்கான பரிகாரங்களும் மற்றும் புல் வளர்த்தலும் உணவு உற்பத்தியும் போன்ற பல பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இதன் அடுத்தகட்டமாக எதிர்வரும் 22 ஆம் திகதி பருத்தித்துறை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு மேற் கொள்ளப்பட்டு வரும் உற்பத்தி நடவடிக்கைகள் காண்பிக்கப்பட உள்ளன.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதி காரிகள் இவர்களுக்கான பயிற்சியினை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சு தனது சுற்றறிக்கைகளைத் தெளிவாக வெளியிடுவது ஆசிரியர்கள் தமது உரிமைகளைப் பெற உதவும்

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் சகலதையும் தற்போது இணையத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளன. ஆனால், கல்வியமைச்சின் சுற்றறிக்கைகள் எல்லாம் இணையத்தில் வெளியிடப்படுவது இல்லை, அனுப்பப்படும் பெரும்பாலான சுற்றறிக்கைகள் தமிழில் இருப்பதும் இல்லை. மொழிபெயர்ப்புக்களில் கூட தவறுகள் காணப்படுகின்றன. இவை எல்லாம் தமிழ் பேசும் ஆசிரியர்கள் தமக்கு உரிய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் பாதிப்பை உண்டாக்குகின்றன.

1994.10.06 ஆம் திகதி தொடக்கம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை தொடர்பாக இதுவரை 35 இற்கும் மேற்பட்ட சுற்றறிக்கைகள் வெளியாகியுள்ளன. இவற்றை அமுல்படுத்தும்போது இச்சேவையில் உள்ளவர்களை உரிய வகுப்பில் அல்லது தரத்தில் உள்வாங்குவது தொடர்பாக மாகாணங்கள் இடையே, மாவட்ட, வலயக் கல்விக் காரியாலயங்கள் இடையே வேறுபாடுகள் கூடக் காணப்படுகின்றன.

ஒரே நாளில் நியமனம் பெற்ற, ஒரே திகதியில் டிப்ளோமாவைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள் வேறு வேறு திகதிகளில் வெவ்வேறு ஆண்டுகளில் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். குறிப்பாக பட்டதாரி ஆசிரியர்கள் தொடர்பாகவே இந்த முரண்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது. கடைசியாக வெளியான 2005/04 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் சேவைக் காலக் கணக்கீடு 2008.11.20 ஆம் திகதி சுற்றறிக்கையின் மூலம் 2008.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அடுத்த வகுப்புகளுக்கு அல்லது தரங்களுக்கு உள்வாங்கப்படாத சகல ஆசிரியர்களுக்கும் 2008.12.31 ஆம் திகதிக்கு உரிய புள்ளிகள் பெறப்பட்டு இருந்தால் பதவி உயர்வு கிடைக்கவேண்டும்.

கடந்த நவம்பர் மாதம் கல்வி அமைச்சு பெரிதாகப் பிரசாரப்படுத்திய சம்பளத்திட்டம் தொடர்பாகவோ, உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பாகவோ இது வரை எந்தவித சுற்றறிக்கையும் வெளியிடப்படவில்லை. இது 2009.01.01 ஆம் திகதி தொடக்கமே அமுலாக உள்ளது. இதன் மூலம் கிடைக்கும் நன்மைகளால் நிலுவைகள் இருந்தால் கூட முற்பட்ட திகதிகளில் வழங்கப்படும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது.

முன்பு வெளியான பல சுற்றறிக்கைகளின் படி சரியாக உள்வாங்கப்படாத பதவி உயர்வு பெறாத ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகின்றது. கடைசியாக வெளியான 2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கைப்படி பார்த்தால் கூட இவர்கள் பலருக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் நிலுவையும் ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பள அதிகரிப்பும் கிடைக்க வேண்டும். பட்டதாரி ஆசிரியர்கள் உள்வாங்கல், பதவி உயர்வு தொடர்பான 1997.04.30 ஆம் திகதி 97/5ஆம் இலக்க சுற்றறிக்கை சரியாக கவனத்தில் கொள்ளப்படாமையே இதற்குக் காரணமாகும். இச்சுற்றறிக்கைக்கு அடிப்படையான 1997.03.11 ஆம் திகதிய 966/5ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையின் இறுதிக் குறிப்பில் சேவையில் உள்ளெடுக்கப்படும் அலுவலர்கள், அவ்வாறு உள்ளெடுக்கபட்ட பின்னர் இப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய நடைபெறும் பதவி உயர்வுகளுக்காக சேவைக் காலம் கணிக்கப்படும்போது உள்ளெடுக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த சம்பளப்படி கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2005/04 ஆம் இலக்கச் சுற்றறிக்கை தொடர்பாக, 2006.03.06 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட ஆலோசனைக் குறிப்பின் 1:1:4 இலக்கத்தில் இது தெளிவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த ஆலோசனைக் குறிப்பில் மூன்றாம் பக்கத்தில் உள்ள இரண்டாம் உதாரணத்தில் மேலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன்படி 1994.10.06ஆம் திகதி அன்று உள்வாங்கலின்போது குறிக்கப்படும் சம்பளப்படி நிலை அடுத்த பதவி உயர்வுக்குச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்.

பொதுவான அட்டவணையொன்றின் மூலம் இதைக் குறித்துக் காட்டுவது சிரமமானதாகும். பின்வரும் உதாரணத்தைப் பாருங்கள். 1987.10.01ஆம் திகதி அன்று பட்டதாரி நியமனம் பெற்ற ஒருவர், 1994.10.01 ஆம் திகதி அன்று கல்வி பின் படிப்பு டிப்ளோமா படிப்பை முடித்திருந்தால் அவர் தொழில் தகைமையுள்ள பொதுப் பட்டதாரி அட்டவணையில் 1994.10.06 ஆம் திகதி அன்று ரூபா 64,800 சம்பளத் திட்டத்தில் உள்வாங்கப்படவேண்டும். இரண்டாம் வகுப்பு 2 ஆம் தரத்தில் இது எட்டாவது படிநிலையாகும். இவர் இந்த வகுப்பில் எட்டுப்புள்ளிகள் உழைத்துள்ளதாகக் கருதப்பட்டு, கல்வி டிப்ளோமாவுக்கு கிடைக்கும்1 புள்ளியுடன் 1995.10.01ஆம் திகதி வரையிலான சேவைக்காலத்திற்கு மேலும் 1 புள்ளியையும் சேர்த்து 10 புள்ளிகளை உழைத்துள்ளார் என்ற அடிப்படையில் 1995.10.01 ஆம் திகதி தொடக்கம் 2-1 இற்கும் 2000.10.01 ஆம் திகதி 1 ஆம் வகுப்பிற்கும் பதவி உயர்த்தப்பட வேண்டும்.

இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். 1990 ஆம் ஆண்டு சிறப்புப் பட்டத்துடன் அல்லது கணிதம் அல்லது விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக நியமிக்கப்பட்ட ஒருவர் 1994.10.06 ஆம் திகதி அன்று இரண்டாம் வகுப்பு இரண்டாம் தரச் சம்பளத் திட்டத்தில் 66, 360 ரூபா படியில் வைக்கப்படுகின்றார். இவர் இத்தரத்தில் 9 புள்ளிகள் உழைத்துள்ளதாகக் கருதப்பட்டு 1999 ஆம் ஆண்டு ஆசிரியர் 1 ஆம் வகுப்புக்குச் செல்லமுடியும். இதில் 9 வருடத்திலேயே முதலாம் வகுப்புக்குச் செல்லக் கூடியதாகவுள்ளது. 1994.10.06 ஆம் திகதிக்குப் பின் நியமிக்கப்பட்டவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைக்காது. இத்தகைய ஆசிரியர்களுக்கு இதற்குப் பிறகு சேவைக் காலத்திற்கு வருடமொன்றுக்கு 1 புள்ளி வழங்கப்படுவதே இதற்குக் காரணமாகும்.

1994.10.06 ஆம் திகதி கல்வி டிப்ளோமாப் படிப்பை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் தொடர்பாகவும், சம்பளப்படி நிலைப்படி உள்வாங்கல் தொடர்பாகவும், புதிதாக வெளியாகியுள்ள இரண்டு சுற்றறிக்கைகள் பட்டதாரி ஆசிரியர்களின் 14 வருட பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வை வழங்கியுள்ளன எனலாம். சுற்றறிக்கைகளின்படி, 1994.10.06 ஆம் திகதிக்கு முன் நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் (சுற்றறிக்கைப்படி உள்வாங்கப்படாத) சகலருக்கும் மீண்டும் சம்பளம் செய்யப்படவேண்டும். குறைந்தபட்சம் 2005.01.01ஆம் திகதி தொடக்கம் நிலுவையும் கிடைக்கவேண்டும்.

2008.08.22 ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளரால் கையொப்பம் இடப்பட்டு, மேலதிக செயலாளர் கே.முஹமட் தம்பியினாலும் மேலதிக ஒப்பம் இடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் உதாரணம் ஒன்றைக் காட்டி அவ்வாறு சம்பளம் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1994.10.06 ஆம் திகதி அன்று இலங்கை ஆசிரியர் சேவையில் 2-II தரத்தில் 5ஆவது சம்பளப் படிநிலையான 60,120 ரூபாவிற்கு உள்வாங்கப்படும் ஒருவர் மீண்டும் 5 புள்ளிகள் பெற்றுக்கொண்டால் 1998.05.02 ஆம் திகதி இலங்கை ஆசிரியர் சேவையின் 2-1 தரத்திற்கும், பின்னர் ஐந்து புள்ளிகளை உழைத்துக்கொண்டால் 2003.05.02 ஆம் திகதியில் 1 ஆம் வகுப்பிற்கும் பதவி உயர்த்தவேண்டும் என்று இந்தச் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உங்களது கல்வி வலயத்தில் உள்ள இந்தத் தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்கள் இருந்தால் இவ்வாறு பதவி உயர்வு வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியர் பற்றிய மேலதிக தகவல் என்னவென்றால் இவர் 1989.05.02 ஆம் திகதி தொடக்கம் கலைப் பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதோடு 01.09.1996 ஆம் திகதி தொடக்கம் செல்லும் படியாக கல்வி டிப்ளோமாச் சான்றிதழையும் பெற்றுள்ளார் என்பதாகும்.

**அன்பு ஜவஹர்ஷா**

இந்த உதாரணத்தை வைத்துப் பார்த்தால் சரியாக உள்வாங்கப்பட்டால் 14 வருட காலத்திலேயே பொதுப் பட்டதாரி ஆசிரியர் (1994.10.06 ஆம் திகதிக்கு முன் நியமனம்பெற்ற) முதலாம் வகுப்பு பதவி உயர்வைப் பெற்றுவிடலாம். சிறப்புப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் முன் சொல்லப்பட்ட உதாரணத்தின்படி 9 வருடங்களிலேயே முதலாம் வகுப்புக்குச் செல்லமுடியும். வலயக் கல்விக் காரியாலயங்கள் வாதிடுவது போல 20 புள்ளிகள் அவசியமில்லை என்ற உண்மை இங்கு உதாரணத்தோடு சான்றுபடுத்தப்பட்டுள்ளது. அத்தோடு இச் சுற்றறிக்கையோடு, தாபனப் பிரிவினதும் தேசிய சம்பளப் பதவியணி ஆணைக்குழுவினதும் அறிவுறுத்தல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

14 வருட காலமாக இழுத்தடிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் உள்வாங்கல் தொடர்பாக இங்கு தெளிவான விளக்கமுள்ளது. 1994 ஆம் ஆண்டு இலங்கை




ஆசிரியர் சேவை 2 ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 53,880 -15 X 1,560-77,280 என்ற சம்பளத் திட்டத்தில் 60,120 ரூபா எந்த பகுதிக்குள் வந்தாலும் 5 ஆவது படி நிலையென இங்கு உறுதிப்படுத்தப்பட்டமையால்தான் இந்த நன்மை கிடைக்க இருக்கின்றது.

மேற்கண்ட உதாரணத்தை வைத்து மற்றைய பட்டதாரி ஆசிரியர்களும் தங்களது சம்பள நிலைகளைக் கண்டு கொள்ளலாம். விடயம் அறிந்த ஒரு சில வலயக் கல்விக் காரியாலயங்கள் இதைச் சரியாகச் செய்துள்ளன. 2008.11.21 ஆம் திகதியிடப்பட்டுள்ள 2008 /45ஆம் இலக்க சுற்றறிக்கையைப் பார்ப்போம். 1994.10.06 ஆம் திகதிக்கு முன்னர் ஆசிரியராக நியமனம் பெற்ற இலங்கை ஆசிரியர் சேவையில் தொழில் தகைமை பெற்றிராத பட்டதாரி ஆசிரியர்களை தொழில் தகைமை பெற்றவர்களாகக் கணித்து இலங்கை ஆசிரியர் சேவையில் உள்வாங்கவும், அச்சேவையில் பதவி உயர்வு வழங்கும்போது தொழில் தகைமை பெற்ற ஆசிரியர்களாகக் கருதிச் செயற்படவும், 2005.01.01 ஆம் திகதி தொடக்கம் நிலுவைப்பணம் வழங்கவும் இந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதுவும் தொழில் தகைமை பெறாமை காரணமாகப் பாதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மிகவும் நன்மை தரும் சுற்றறிக்கையாகும். இது போன்ற ஊடகங்களில் வெளியாகும் தெளிவுபடுத்தல்களை சில கல்விக் காரியாலயங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. முறையாக சுற்றறிக்கைகள் கிடைக்கவில்லை என்பதே அவர்களது பதிலாக இருக்கும். சுற்றறிக்கைகளைச் சரியாக வெளியிடுவதும் அவற்றை உரிய நேரத்தில் வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு கிடைக்கச் செய்வதும் கல்வி அமைச்சின் பொறுப்பாகும். இவற்றைச் சரியாக நிறைவேற்றி, ஆசிரியர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள அவ்வமைச்சே வழி செய்யவேண்டும். *

# மாறி வந்த எழுத்துக்களும் தேறி வரும் மாணவர்களும்

''நீங்க சொன்னமாதிரி புத்தகத்தைத் தேடியெடுத்து வாசிச்சன். ஆனா, அதில உள்ள எழுத்துக்கள் சிலதை என்னாலை விளங்கிக்கொள்ள முடியேலை. இந்த எழுத்துக்கள் நான் ஒருக்காலும் அறிஞ்சதுமில்லை, எழுதிப்பாத்ததுமில்ல. என்னாலை தொடந்து வாசிக்கவும் முடியேலை''.

மாணவனுடைய ஆர்வமான கூற்றைக் கேட்டு ஒருகணம் திடுக்கிட்டேன். குறித்த மாணவரிடம் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து, அதிலேயுள்ள முக்கிய விடயங்களைத் தொகுக்கும்படியும் அவற்றின்படி ஒரு கட்டுரை வரையும்படியும் கூறினேன். குறித்த கட்டுரையை எழுதுவதற்கு உதவும் சிறந்த நூலாக அது அமைந்திருந்தது. குறித்த நூல் சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளிவந்தது. பிரபல தமிழறிஞரால் எழுதப்பட்டதும் பலராலும் விரும்பி படிக்கப்பட்டதுமான அந்நூல் தற்போது வழக்கில் இல்லாத பல எழுத்துக்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் உயிர்மெய் எழுத்துக்க்கள் அதிகமாக அடங்குகின்றன.

தமிழிலுள்ள எழுத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வந்துள்ளன. உயிர் எழுத்துக்களைத் தவிர உயிர்மெய் எழுத்துக்கள் இந்த மாற்றத்தினுள் அகப்பட்டுள்ளன. தற்போது வழக்கிலுள்ள றா,னா, ணை,னை,லை,ளை உள்ளிட்ட இன்னும் பல எழுத்துக்கள் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன்னர்தான் இந்த எழுத்துக்கள் தற்போதைய நிலைக்கு மாற்றப்பட்டன. ஆனால், அதற்கு முன்னர் இவ்வாறான எழுத்துக்கள் வேறு வடிவங்களைப் பெற்றிருந்தன. தற்போது சகல தமிழ்ப் பாடத்திட்டங்களிலும், பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் மாற்றம் பெற்ற எழுத்துக்களே கையாளப்படுகின்றன.

இன்று பாடசாலைகளில் தேடற்கல்வி, ஆய்வுக்கல்வி என்பன முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. மாணவர்களுக்கு நூலகப் பாவனை என்பது தவிர்க்க முடியாததா யிற்று. 'அறிவியற் சிந்தனை', 'ஓவியக் கலை', 'சான்றோர்' என்ற சொற்களில் இடம் பெற்றுள்ள பழைய எழுத்துக்கள் தற்போது பயன்பாட்டில் இல்லை. பழைய நூல்களின் முகப்புக்களில்; அட்டைகளில் உள்ள இவ்வாறான எழுத்துக்களை மாணவர்கள் அறிந்திருக்காமையால் அவை பற்றிய கருத்துக்களையும் அவற்றுக்கு ஈடாகத் தற்போது வழக்கிலுள்ள எழுத்துக்களையும் சுட்டிக் காட்ட வேண்டியது காலத்தின் தேவையாகும்.



இவை பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தபோது, ஒரு மாணவனுக்கு, இன்னொரு எழுத்துச் சிக்கலும் வந்தது. 'எங்கட குழுச் செயற்பாட்டில இது ஒரு பிரச்சினையாக இருந்தது. அது என்னெண்டா, உயிர்மெய்யில் இருக்கிற 'ர' எண்ட எழுத்துத்தான். இந்த எழுத்துப் பிரிச்சு எழுதினால் ர்+அ எண்டு வரவேணும். ஆனா, பழைய புத்தகங்களில் ர்+அ எண்டு வருகுது. அதோட அந்தப் புத்தகத்திலேயே 'ர' எண்டதும் 'ர்' எண்டதும் வேறு வேறு எழுத்தாகவே இருக்குது''.

மாணவனின் இவ்வகையான கேள்வியும் தேடலும் நியாயமானதே. இந்த எழுத்துப்பற்றிப் பலரும் பல கருத்துக்களைக் கூறுகின்றனர். இரண்டு என்பதிலுள்ள 'ர'வும் 'கூர்மை' என்பதிலுள்ள 'ர்' உம் வேறுவேறு எழுத்துக்களே. ர் என்ற இந்த எழுத்து நீண்ட காலமாகவும் இப்பொழுதும் கூட 'ர்' என்றே எழுதப்பட்டு வருகின்றது. ஆனால், ர என்பதைப் பிரித்தெழுதினால் ர்+அ என்றே வரவேண்டும். இம்மாற்றங்கள் பாட நூல்களுக்கு ஏற்ப வேறுபட்டாலும் அவற்றின் சரியான வடிவங்களை மாணவர்களுக்கு வழங்கவேண்டும்.

எனவே தற்காலத்தில் கல்வித்திட்டம் மிகவேகமாக மாறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் மாணவர்களை மையப்படுத்திய கற்பித்தல் அமைவதாலும் மேலே குறிப்பிட்ட எழுத்துக்களையும் அவற்றின் பயன்பாட்டையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

சி.தங்கறாபன்,
ஆசிரியர்,
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை மக்களுக்கு ஒரு பகிரங்க மடல்

அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ள அனர்த்தங்களின் பின்னர் யாழ். மாவட்டத்திலுள்ள கிணறுகள் யாவும் மாசடைந்துள்ளன. இவை யாவும் இறைத்து சுத்திகரிக்கப்பட்டு குளோரின் இடப்படவேண்டும். வைத்தியசாலைக் கிணறுகள், பாடசாலைக் கிணறுகள் மற்றும் பொதுக்கிணறுகளை பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும் உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடனும் இறைத்து சுத்திகரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைக் கிணறுகள் அனைத்தையும் இறைத்துச் சுத்திகரிக்க சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் பல வைத்தியசாலைகளில் இப்பணி நடைபெற்றுள்ளது. இப்பணிக்காகப் பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள மத்திய மருந்தகத்தில் கிணற்றை இறைத்துத் துப்புரவாக்குவதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இக்கிணற்றில் வைத்தியசாலைக்கும், பருத்தித்துறை நகர சபைக்கும், தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் பங்கு இருந்தமையினால் இக்கிணறு இறைப்பது சம்பந்தமாக நகர சபையின் செயலாளருக்கும், சம்பந்தப்பட்ட தனியாருக்கும் அறிவிக்கப்பட்டது. மேலும் இக்கிணற்றுக்கு அருகே உள்ள விளையாட்டு மைதானத்தைப் பாவிக்கும் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கும் இவ்வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியினால் அறிவிக்கப்பட்டது. இவர்கள் அனைவரும் இக்கிணற்றை இறைப்பதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர். எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

எனவே ஏற்கனவே திட்டமிட்டபடி 08.01.2009 வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணியாளர்களால் கிணறு இறைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. முற்பகல் 11.30 மணியளவில் ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினர்களென மோட்டார் சைக்கிளில் வந்து மூவர் நீர் இறைக்கும் பணியை உடனடியாக நிறுத்தும்படி கூறினார்கள். பிரச்சினைகள் எதுவும் ஏற்படாதிருக்க அப்பணி உடனேயே நிறுத்தப்பட்டது. அரை மணித்தியாலத்தின் பின்னர் திரும்பி வந்த அந்த மூவரும் கிணறு இறைப்பதை தொடரலாம் எனக் கூறினார்கள். எனவே கிணறு இறைக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

பிற்பகல் ஒரு மணிபோல் ஐக்கிய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எனக் கூறிக்கொண்டு மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் மிகவும் கடுமையான வார்த்தைகளால் அங்கு கடமையிலிருந்த வைத்தியசாலை பெண் பொறுப்பு வைத்திய அதிகாரியை அச்சுறுத்தி உடனடியாகக் கிணறு இறைக்கும் பணியை நிறுத்துமாறும் மிரட்டினர். நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உபகரணங்களை சேதமாக்கப் போவதாக அச்சுறுத்தினர். இதனால் நீர் இறைக்கும் பணி நிறுத்தப்பட்டது.

வெள்ளத்தினால் மாசடைந்த கிணற்று நீரைப் பாவிப்பதனால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கே பாதிப்பு ஏற்படும். அதனாலேயே நாம் இக்கிணறுகளைச் சுத்திகரித்து வருகின்றோம். இப்பிரதேச மக்களின் நலனுக்காகவே இப்பணியை நாம் செய்துவருகின்றோம் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் சிலரது அச்சுறுத்தலுக்கு உள்ளான வைத்திய அதிகாரி இவ்வைத்தியசாலையில் பணியாற்ற மறுத்துவிட்டார். இத்தகைய அச்சுறுத்தலுக்கு மத்தியில் இவ்வைத்தியசாலையில் பணியாற்ற ஏனைய வைத்தியர்களும் மறுத்துவிட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் எத்தனையோ நெருக்கடிகளின் மத்தியில் மிக மோசமான வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. இவ்வேளையில் மிகக் குறைந்த அளவிலான வைத்தியர்களே அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். அவர்கள் மீது இப்படிப்பட்ட கீழ்த்தரமான அச்சுறுத்தல்களை விடுப்பது வெட்கித் தலைகுனிய வேண்டிய செயலாகும். இச்சம்பவத்தையிட்டு வைத்திய அதிகாரிகள் அனைவரும் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகி உள்ளனர்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இவ்வைத்தியசாலையில் பணிபுரிய வைத்தியர்கள் எவரும் முன்வராததால் மறு அறிவித்தல் வரை இவ்வைத்தியசாலையின் சேவைகளை இடைநிறுத்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டதை வேதனையுடன் அறியத்தருகின்றேன். இதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது இருப்பது உறுதி செய்யப்படவேண்டும்.

பருத்தித்துறை வாழ் சமூக பெரியார்களே! மருத்துவப் பணியாளர்கள் மக்களுக்கு தங்கள் சேவைகளை சுமூகமாக வழங்குவதற்கு உரிய சூழலை ஏற்படுத்தித் தாருங்கள். அத்தகைய சூழல் ஏற்படுத்தப்பட்டவுடன் எமது பணிகளை நாம் மீண்டும் தொடருவோம்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்தியப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# வீட்டுக்கு அத்திவாரம் போன்று சமூக வாழ்வுக்கு அறநெறிக்கல்வி

## கலாசார அபிவிருத்தி அலுவலர் கருத்து

வேலணை,ஜன.13

வீட்டுக்கு அத்திபாரம் எவ்வளவு முக்கியமோ, சமூக வாழ்வுக்கு அறநெறிக் கல்வியும் அவ்வளவு முக்கியமானதாகும். எவ்வளவுதான் உயர்கல்வி கற்றாலும் ஒழுக்க நெறி பிறழ்ந்த வாழ்க்கையினால் பயன் ஏதும் இல்லை. அதனாலே சிறுவர்கள் அனைவரும் இளமையிலே அறநெறிக்கல்வியினூடாக வாழ்வுக்கான ஒழுக்கநெறிப் பயிற்சியூட்டப்படுவது அவசியமாகும்.

கரவெட்டிப் பிரதேச கலாசார அபிவிருத்தி அலுவலர் செ.ரூபகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

உடுப்பிட்டி, இமையாணன் சிறிமுருகன் அறநெறிப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பிலும், கலைவிழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாசார அபிவிருத்தி அலுவலர் தமதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விஞ்ஞான, கணித நெறிகளின் மூலம் உயர்தொழில் தகைமைகளைப் பெற்றாலும் வாழ்க்கைக்கான ஒழுக்கநெறிகளை அறநெறிக் கல்வியின் மூலமே பெறமுடியும். அதனால் ஒவ்வொரு சிறுவரும் அறநெறிக்கல்வி பெற உதவவேண்டும். எமது பிரதேசத்திலே பல அறநெறிப் பாடசாலைகள் இயங்குகின்றன. எனினும் பன்னிரெண்டு பாடசாலைகள் மட்டுமே பதிவு பெற்றுள்ளன. ஏனெனில் பாடசாலைகளுடன் இணைந்துள்ள கோயில்களும் பதிவு பெற்றிருந்தால்தான் பாடசாலைகள் பதியப்படமுடியும். இங்கு பல கோயில்கள் பதியப்படவில்லை. ஏனெனில் அவற்றில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அதனால் அவற்றுடன் இணைந்த அறநெறிப் பாடசாலைகளும் பதியப்படவில்லை.

ஆனாலும் இங்கு சிறிமுருகன் கோயிலும், இப்பாடசாலையும் இவ்வூர் மக்களின் ஒற்றுமையின் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

மேலும் அறநெறிப் பாடசாலை வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவேண்டும் என்பதற்காக வெள்ளிக்கிழமை தனியார் கல்வி நிறுவனங்கள் மூடி ஒத்துழைப்பதற்காக எமது பிரதேச செயலர் தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுடன் கலந்துரையாட ஏற்பாடு செய்துள்ளார். அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் சம்பளம் பெறாது சேவை நோக்குடன் செயலாற்றுவதால் இங்கு பயிலும் மாணவர்களும் சிறந்த பண்புகள் பெற்றுக்கொள்ளமுடியும். இவற்றை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து தமது பிள்ளைகளை உரிய நேரகாலத்துடன் அறநெறிக்கல்வி பெற வழிகாட்டவேண்டும் - என்றார்.

அறநெறி ஆசிரியை திருமதி சி.சிவசாந்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விலே, அதிபர் இ.இராசதுரை, ஆசிரிய ஆலோசகர் சி.நவரத்தினம், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றினர். மாணவர்களின் இசை, நடன நிகழ்வுகளும் காத்தவராயன் சிந்து நாடகக் கூத்தும் மேடையேற்றப்பட்டன. (201-267)

## திருவாசகம் முற்றோதல்

சுழிபுரம்,ஜன.13

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (202)

## வங்கிகள், காப்புறுதி நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகள்



புதுவருடப் பிறப்பின் சிறப்பு நிர்வாக நிகழ்வாக வல்வெட்டித்துறை மக்கள் வங்கியில் 'ஜயசிறி' அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர் ஒருவருக்கு வல்வை முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் வங்கியின் சார்பில் பரிசளிக்கிறார்.

மக்கள் வங்கி வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராஜாவும், வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தனும் படத்தில் காணப்படுகின்றனர்.



இலங்கை வங்கி, காங்கேசன்துறை கிளையில் புதுவருட தினத்தன்று கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக்குருக்கள், முகாமையாளர் பேதுறுப்பிள்ளை பிரான்சிஸ் மற்றும் கிளை ஊழியர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: த.பரமலிங்கம்)



இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீடுகளில் ஒன்றுக்கான இழப்பீட்டுத் தொகையை ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

வீட்டின் உரிமையாளர் ரி.குணசிங்கத்திடம் இழப்பீட்டுத்தொகை வழங்கப்படுகின்றது.



செலிங்கோ இன்ஸூரன்ஸ் ஆயுள் பகுதியின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த தவராசா ரகுவரன் என்பவருடைய மரணத்திற்குப் பின்னரான 'பிரதீபா' இழப்பீட்டுத் தொகையாக ரூபா ஒரு லட்சம் பெறுமதியான காசோலையை அவரின் தாயாராகிய ரி.விஜயராணியிடம் நெல்லியடி கிளை முகாமையாளர் ரி.[illegible] கையளிக்கின்றார். அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி வி.[illegible], விற்பனை நிறைவேற்றுநர் ரி.சோபனா, விற்பனை ஆலோசகர் ரி.லிங்கதாஸ், இறந்தவரின் சகோதரன் ரி.கபில்தேவன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் 'சோஆ' நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோம் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இறுதிப் போட்டியில் மானிப்பாய் வெஸ்ரோம் வி.கவும், மயிலிட்டி ஒற்றுமை வி.கவும் மோதிக் கொள்ளும் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# தீர்வுக்கான பொதுக்கருத்தை எட்ட இந்தியா தலையிட்டு உதவ முடியும்

## சென்னையில் பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தகவல்

சென்னை, ஜன. 13

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான பொதுக் கருத்தை எட்டுவதற்காக இந்தியா இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளுடனும் பேச் சுகளை மேற்கொள்ள வேண்டுமென பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் சென்னையில் வைத்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இந்தியா முக்கிய பங்காற்றலாம். இந்தியா ஆற்றக்கூடிய பங்களிப்பை வேறு எந்த நாட்டாலும் செய்ய முடியாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சகல அரசியல் கட்சிகளை நோக்கியும் இந்தியா தனது நேசக் கரங்களை நீட்ட வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த பொதுக்கருத்தினை எட்டுவதற்கு இந்தியா உதவவேண்டும் - என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் அனைத்துக் கட்சிகளினதும் நம்பிக்கையைப் பெறுவதற்கு இந்தியாவால் மாத்திரமே முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசின் அதிகாரப்பகிர்வு முயற்சிகள் குறித்து திருப்தியடையாத அரசியல் கட்சிகளையும் இந்தியா இவ்விடயத்தில் வலியுறுத்தி இணங்கச் செய்யவேண்டும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெருமளவு இந்திய வம்சாவளியினரைக் கொண்ட இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இந்தியா ஆற்றக்கூடிய ஆக்கபூர்வமான பங்களிப்பொன்றுள்ளது.

இந்தியா தலையிட்டு சமாதானத்தைக் கொண்டுவருமானால் அங்குள்ள இந்தியத் தமிழர்கள் அதற்காக நன்றியுடையவர்களாக விளங்குவார்கள் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் இந்தியா உதவ வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தமது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு சனிக்கிழமை கொழும்பு திரும்பினார். (சி)

## கற்பூரத்திற்குத் தட்டுப்பாடு நிலவுகிறது

யாழ்ப்பாணம், ஜன.13

கற்பூரத்திற்கு பெரும் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் முன்னர் 75 ரூபாவுக்கு விற்கப்பட்ட காவடி கற்பூரப்பெட்டி ஒன்று தற்போது 130 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

தற்போது தைப்பொங்கல் பண்டிகைக் காலமாகையால் இந்தக் கற்பூரத் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் சிரமமடைவதாகக் கூறப்படுகின்றது.

(203-224)

# யுத்தமும் அதன் வெற்றிகளும் அரசுக்கு ஜே.வி.பியின் அழுத்தத்தால் கிடைத்தவையே

## கண்டியில் சோமவன்ஸ பெருமிதம்

கண்டி, ஜன. 13

''யுத்தமும் அதன் வெற்றிகளும் நாம் கொடுத்த அழுத்தம் காரணமாகவே நடைபெறுகின்றன. இவ்வாறான வேளையில் தேர்தல் ஒன்றை நடத்த அரசு முன்வந்துள்ளது. நேர்மையான ஒரு தேர்தல் நடைபெற வேண்டுமானால் 17 ஆவது அரசயாப்பு திருத்தத்திற்கான விடயங்களைக் கருத்தில் கொண்டு தேர்தலை நடத்துமாறு நாம் அரசைக் கோருகிறோம்.''

- இவ்வாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டம் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் திமுது பண்டார அபயகோன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு சோமவன்ஸ மேலும் கூறியவை வருமாறு:-

கிளிநொச்சியை அரசபடைகள் கைப்பற்றியமை, ஆனையிறவு விடுவிக்கப்பட்டமை முக்கிய விடயங்களாகும். நாம் கொடுத்த அழுத்தம் காரணமாக இந்த யுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் காலப்பகுதியில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. அது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் யுத்தம் என்ற பேச்சுக்கு இடம் இல்லாமல் போயிருக்கும்.

புலிகளின் நிர்வாகத் தலைமைப்பீடமாக கிளிநொச்சி மேலும் வலுப்பெற்றிருக்கும். கிளிநொச்சியை வெற்றி கொண்ட பெருமை படையினருக்கே உரித்தானதாகும்.

ஆயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்த படையினரின் இந்த வெற்றி குறித்து நாம் எமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

புலிகள் அமைப்பு தோற்கடிக்க முடியாத அமைப்பு என்ற வாதத்தைப் படையினர் பொய்ப்பித்து விட்டனர். புலிகள் கண்ட கனவு நனவாகவில்லை. எமது அமைப்பு எப்பொழுதோ இந்த யாதார்த்தத்தை முன்வைத்திருந்தது. எனவே இராணுவத்தின் வெற்றி குறித்து முழுமையாகப் பெருமைப்படக் கூடியவர்கள் ஜே.வி.பியினரே.

எவராவது யுத்தத்தை நிறுத்த வேண்டுமெனக் கோரி அரசு அதற்கு தலைசாய்த்தாலும் ஜே.வி.பி ஒரு போதும் இடம் கொடுக்காது.

கடந்த 30 வருடங்களாக இந்த நாட்டில் திருட்டும், அழிவும், ஊழலும் பெரும் அளவில் அதிகரித்து விட்டன. திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் எவர் எவரைக் கொன்றொழித்தோ வயிற்றை நிரப்பிக் கொள்ளும் நிலை தலைதூக்கியிருந்தன.

இவற்றை எல்லாம் எதிர்த்து போர்க் கொடி தூக்கிய பெருமை ஜே.வி. பி.க்கே உரித்தாகும். நாட்டைச் சரியான வழியில் இட்டுச் செல்லக் கூடிய திறமையும் கொள்கையும் ஜே.வி.பியிடமே உண்டு- என்றார். (சி)

## திருவாசக முற்றோதல் இன்றுடன் நிறைவுபெறும்

யாழ்ப்பாணம், ஜன.13

அகில இலங்கைத் திருமறை மன்றத்தினால் இந்துகலாசார அமைச்சின் முன்னாள் அமைச்சரான தியாகராஜா மகேஸ்வரன் மறைந்த ஒருவருடப் பூர்த்தியை நினைவு கூர்ந்து கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் யாழ். குடாநாட்டு ஆலயங்களில் திருவாசக முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் போன்றவை நடத்தப்பட்டன.

மேற்படி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க் கிழமை அதிகாலை பலாலி வீதி கந்தர் மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை ஸ்ரீநடராஜப் பெருமான் திருக்கோயிலில் நிறைவுபெறுகின்றன. (201)

## மகரஜோதிப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.13

கோண்டாவில் கிழக்கு ஐயப்பன் ஆலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெறவுள்ளது. மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆஞ்சநேயர் பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து சுவாமிமார்கள் அனைவரும் மாலை கழற்றும் நிகழ்வு இடம் பெறும். தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். (201)

## தொண்டர் ஆசிரியர்கள் அமைச்சரைச் சந்திக்கவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ்.அலுவலகத்தில் சந்திக்கவுள்ளனர்.

பதிவு செய்த அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் அன்றையதினம் காலை 8 மணிக்கு ஒன்றுகூடுமாறு யாழ்.மாவட்ட தொண்டர் அசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (202)

## ஆஸ்பத்திரி வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.13

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குழிகள் சீர்செய்யப்பட்டு வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாநகரசபையே இந்தத்திருத்தவேலைகளை மேற்கொண்டு வருகின்றது.(203-224)


முதலாம் ஆண்டு நினைவுகளில்

உதிப்பு 14 . 01 . 1929



உதிர்வு 26 . 12 . 2007

திருமதி அழகரத்தினம் வள்ளிப்பிள்ளை
(மட்டுவில் தெற்கு)

ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயரில் கொண்ட
எங்கள் அன்புத் தாயே!
ஆறுதல் சொல்ல யாருமின்றித்
தவிக்கிறோம் - மீண்டும் எம்மிடம் வாரீரோ!

புத்தூர். (சி/56597) குடும்பத்தினர்.



**Personal Class**

தரம் 1 - 12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken English with Grammar கற்க விரும்பும் மாணவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். Spoken கற்பவர்களுக்கு எழுத, பேச, வாசிக்க, சரளமாக உரையாடக் கூடிய முறையில் வழி காட்டப்படும். O/L எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.

தொடர்பு: கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 077 1372280



**ENGLISH**
**Spoken with Grammar**
By BRITTO

புதிய பிரிவு (வியாழன்/ வெள்ளி)
வகுப்புகள் ஆரம்பம்:15.01.2009 (வியாழன்)
(ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)



மரண அறிவித்தல்

திருமதி மகிமைநாயகி செபரட்ணம்



பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட, தற்போது இல.30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டையில் வாழ்ந்து வந்தவருமாகிய திருமதி மகிமைநாயகி செபரட்ணம் அவர்கள் (11.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பு செபரட்ணம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகம் - செல்வநாயகி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் வசந்தராசா (அவுஸ்திரேலியா), வசந்தராணி, சயந்தராணி, நேசராசா (இயக்குனர் தனியார் கல்வி நிலையம் (Your citadel - கொழும்பு), ஜெயராசா ஆகியோரின் பாசமிகு தாயும் ஆனந்தி (அவுஸ்திரேலியா), ஞானேந்திரன் (ஆசிரியர் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி), மகிமைநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் மரியதர்சினி (1ஆம் வருட மாணவி கலைப்பீடம்,யாழ்.பல்கலைக்கழகம்), மதிவதனி (மாணவி யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி), அன்ரனி நேசகுமார், நேசானந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஞானேந்திரன்: (ஆசிரியர் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி) மருமகன்

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை. (81751)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கலம் தேர்தலில் தி.மு.க. அபார வெற்றி!



திருமங்கலம், ஜன. 13

திருமங்கலம் சட்டப்பேரவை இடைத்தேர்தலின் வாக்கு எண்ணிக்கையில் தி.மு.க. வேட்பாளர் லதா அதியமான் 39 ஆயிரத்தி 266 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளார்.

திருமங்கலம் தொகுதி இடைத்தேர்தல் 190 வாக்குச் சாவடிகளில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அ.தி.மு.க. சார்பில் முத்துராமலிங்கம், தி.மு.க. சார்பில் லதா அதியமான், தே.மு.தி.க. சார்பில் தனபாண்டியன் மற்றும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் பத்மநாபன் உள்பட 26 பேர் போட்டியிட்டனர்.

மொத்தம் ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 369 வாக்குகள் பதிவாகியிருந்தன. இதில் 67 ஆயிரத்து 748 ஆண்களும், 70 ஆயிரத்து 621 பெண்களும் வாக்களித்தனர். இந்தத் தொகுதி வாக்கு எண்ணிக்கை மதுரை மருத்துவக் கல்லூரியில் பலத்த பாதுகாப்புடன், தேர்தல் அலுவலரும் நிலச் சீர்திருத்த உதவி ஆணையருமான ராமச்சந்திரன் முன்னிலையில் தேர்தல் பார்வையாளர்கள் சுனில்குமார் குஜுர், ஆனந்த்சிங் ஆகியோர் மேற்பார்வையில் நடந்தது.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியதிலிருந்தே தி.மு.க. வேட்பாளர் லதா அதியமான் முன்னிலையிலும் அவரைத் தொடர்ந்து அ.தி.மு.க. வேட்பாளர் முத்துராமலிங்கமும் இருந்தனர். அதையடுத்து வாக்கு எண்ணிக்கை முடிவு காலை 11.35 மணிக்கு வெளியிடப்பட்டது.

அதில் தி.மு.க. வேட்பாளர் லதா அதியமான் 79 ஆயிரத்து 422 வாக்குகளையும், அவரைத் தொடர்ந்து அ.தி.மு.க. வேட்பாளர் முத்துராமலிங்கம் 40 ஆயிரத்து 156 வாக்குகளையும் பெற்றிருந்தனர். அதாவது அ.தி.மு.க. வேட்பாளரைவிட தி.மு.க. வேட்பாளர் 39 ஆயிரத்து 266 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

மேலும் தே.மு.தி.க. வேட்பாளர் தனபாண்டியன் 13 ஆயிரத்து 136 வாக்குகளையும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி வேட்பாளர் பத்மநாபன் 831 வாக்குகளையும் பெற்றனர்.



ராஜஸ்தானில் 16வது சர்வதேச ஒட்டகத் திருவிழா நடக்கிறது. அலங்கரிக்கப்பட்ட ஒட்டகத்தைப் பார்த்து வெளிநாட்டு சுற்றுலாப் பெண் தொட்டு விளையாடி மகிழ்கிறார்...

# 30 வருடங்களாகப் போராடும் புலிகளை தீவிரவாதிகள் என ஒதுக்கிவிட முடியாது!

## கம்யூனிஸ்ட் பாண்டியன் வலியுறுத்து



இலங்கையில் தனி ஈழம் கோரி 30 ஆண்டுகளாகப் போராடிவரும் விடுதலைப் புலிகளை தீவிரவாதிகள் என ஒதுக்கிவிட முடியாது - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகர்க் குழு சார்பில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய அலுவலகத்தைத் திறந்துவைத்து பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

மக்களின் ஆதரவின்றி ஓர் இயக்கம் 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து போராட்டம் நடத்த முடியாது. ஆகவே, புலிகளைத் தீவிரவாதிகள் என ஒதுக்கிவிட முடியாது.

கடந்த 20 ஆண்டுகளில் சிங்களவர்கள் ஒரு கோடி பேர் அதிகரித்துள்ளனர். ஆனால், தமிழர்கள் 35 லட்சம் பேர்தான் உள்ளனர். அதற்குக் காரணம் பலர் போரில் இறந்து விட்டனர். மேலும் பலர் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து விட்டனர்.

இலங்கையில் போரை நிறுத்த வேண்டும் எனப் பத்திரிகைகள் வாயிலாக, பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தாலே போதும். அங்கு அமைதி திரும்பி விடும்.

டில்லியில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்தபோது, இதே கருத்தை நான் வலியுறுத்தினேன். அதற்கு பிரதமர் 'நல்ல யோசனை' என்றார்.

ஆனால், அதன்பிறகு இலங்கைப் போரை நிறுத்த, மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது இந்தியாவில் வாழும் 6 கோடி தமிழர்களை அவமானப்படுத்தும் செயல் - என்றார்.



விவேகானந்தரின் பிறந்த தினமான நேற்று தேசிய இளையோர் தினமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி மதுரை பாரதி யுவ கேந்திரா சார்பில் மதனகோபால் சுவாமி கோயிலில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியில் விவேகானந்தர் போல் வேடமணிந்து ஏராளமான சிறுவர்கள் பங்கேற்றபோது.........

# இலங்கை தமிழினப் படுகொலையை கண்டுகொள்ளாமலுள்ளது இந்தியா

## வைகோ ஆவேசக் குமுறல்



ஈரோடு, ஜன.13

ஹிட்லர் ஆட்சியில் கூட நடக்காத கொடுமை இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படுகிறது. இந்த இனப் படுகொலையை இந்திய அரசு கண்டு கொள்ளாமலுள்ளது - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆவேசம் வெளியிட்டுள்ளார்.

ஈரோட்டில் நேற்றுமுன்தினம் நடந்த ம.தி.மு.க தேர்தல் நிதியளிப்பு விழாவில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்படுகிறார்கள். 4 ஆண்டுகளாக இந்திய அரசு இலங்கை அரசுக்கு அனைத்து வகையிலும் உதவி செய்து வருகிறது. அதனால்தான் இந்தளவு பாதிப்பு இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது. மத்திய அரசின் கூட்டணியில் இருக்கும் எந்த கட்சிகளும் இலங்கைத் தமிழர் விரோதப் போக்கைக் கண்டுகொள்ளவில்லை.

ஹிட்லர் ஆட்சியில் கூட நடக்காத கொடுமை இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படுகிறது. இதைத்தான் சினிமா இயக்குநர் சீமான், கொளத்தூர் மணி, மணியரசன் ஆகியோர் பேசினர். இதில் என்ன தவறு உள்ளது? போபர்ஸ் பீரங்கி ஊழல் பிரச்சினையிலிருந்து விடுபட ராஜீவ்காந்தி இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பினார். இராணுவம் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டது. இதை சீமான் பேசியதில் என்ன தவறு உள்ளது?

தற்போது இராணுவ உதவி மட்டுமின்றி இந்திய அரசு உளவு அமைப்பான 'றோ' மூலம் இலங்கை இராணுவத்துக்கு உதவி செய்து வருகிறது. இந்திய அரசு கொடுத்த பணத்தில் இருந்து ஆயுதம் வாங்கி இலங்கை அரசு நம் இனத்துக்கு எதிராகப் பயன்படுத்துகிறது.

உண்மையில் விடுதலைப் புலிகள் முல்லைத்தீவிலுள்ள 6 லட்சம் தமிழர்களுக்கு அரணாக உள்ளனர். அவர்களை வீழ்த்த முடியாது. மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்துக்கு சமாதி கட்டும் நாள்தான் தமிழர்கள் சாப்பிட்ட சாப்பாடு செரிக்கும் நாளாகும். இனப்படுகொலையை இந்திய அரசு கண்டு கொள்ளாமல் உள்ளது.

ஆனால் வாஜ்பாய் அரசு ஒரு நாளும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படவில்லை. தற்போது மத்திய அரசு எதிரான நிலைப்பாட்டை எடுத்துள்ளது - என்றார்.

# இலங்கை இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டிய பொறுப்பு இந்தியாவுக்குள்ளது

## ராமதாஸ் வலியுறுத்து



இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வு காண வேண்டிய கடமையும், பொறுப்பும் மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்குள்ளது - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில் அவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அவர்களின் போராட்ட வடிவம் முக்கியமல்ல. அவர்களது கோரிக்கை சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதை இந்தியாவும் ஒப்புக் கொண்டுள்ளது. அமைதிக்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்துள்ளது. தொடர்ந்தும் எடுத்து வருகிறது.

தற்போது இலங்கை அரசு முழு அளவிலான சண்டையை நடத்தி வருகிறது. முல்லைத் தீவுப் பகுதிக்கு சண்டை பரவினால் உயிரிழப்பு பெருமளவில் இருக்கும்.

இலங்கை அரசின் சண்டையால் முல்லைத்தீவில் ஏற்படப்போகும் உயிரிழப்பு மனித குல வரலாற்றில் மிகப்பெரிய அளவிலான மனிதப் படுகொலையாக இருக்கும். இதைத் தடுக்க போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று உலகிலுள்ள தமிழர்கள் விரும்புகின்றனர்.

இதுகுறித்து சென்னையில் நடைபெற்ற வெளிநாடு வாழ் தமிழர்கள் மாநாட்டில் மலேசியத் தமிழர்கள் தலைவர் பி.ராமசாமி வலியுறுத்தியுள்ளார். இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வுகாண வேண்டிய கடமையும், பொறுப்பும் மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு உள்ளது - என்றார்.

# இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சின் ஊடாகவே தீர்வு!

## மார்க்சிஸ்ட் பிருந்தாகரத் தெரிவிப்பு

கோவை, ஜன.13

இலங்கையில் போரை நிறுத்த இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அங்குள்ள தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண வேண்டும் - என்று மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் பிருந்தாகரத் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கோவையில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையின் இறையாண்மை மிக முக்கியம். அதே நேரத்தில், அங்குள்ள தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். அங்கு போரை நிறுத்தி விட்டு பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். போரை நிறுத்த இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இதற்கு ஒன்றுபட்ட இலங்கைக்குள் அவர்கள் விரும்பக்கூடிய சுயாட்சியை வழங்குவது மட்டுமே தீர்வாக அமையும். இதைப் [illegible]



தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற ஏழு ஈழ அகதிகளை கடந்த சனிக்கிழமை பொலிஸார் கைது செய்தனர். அவர்களைப் படத்தில் காணலாம்.

# மும்பைத் தாக்குதலுக்கு தீவிரவாதிகள் பயன்படுத்திய கப்பல் பாகிஸ்தானில்!

## சிதம்பரம் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜன. 13

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் வந்த கப்பல், பாகிஸ்தானின் துறைமுகத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளது - என்று உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு:

வங்க தேசத்தில் இருந்து சட்டவிரோதமாக இடம் பெயர்ந்து வருபவர்களை கண்காணிக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மும்பைத் தாக்குதலைப் பொறுத்த வரையில் போதுமான உளவுத் தகவல்கள் கிடைக்கத்தான் செய்தன. நாடாளுமன்றத்தில் கூறியது போல் இந்த தகவல்கள் அனைத்தும் இரு முகவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. [illegible]வின் அடிப்படையில் நன்றாகத்தான் செயற்பட்டனர். ஆனால் பாகிஸ்தானிலிருந்து தீவிரவாதிகள் வந்த கப்பல் அல்லது படகை சரியாக அடையாளம் காண முடியவில்லை. உளவுத்துறை அமைப்புகளிடையே தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி ஏற்பட்டு விட்டது. இது ஒரு தோல்வி என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தீவிரவாதிகள் வந்த கப்பல் இப்போது பாகிஸ்தானில் மறைவாக வைக்கப்பட்டு உள்ளது. ஏதாவது சிறிய துறைமுகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. அதை நாம் பார்க்கவில்லை. அந்தக் கப்பல் யாருக்குச் சொந்தமானது என்பது பற்றி பாகிஸ்தானில்தான் விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தரப்பு ஒரு நாள் தொடர்

# ஸிம்பாப்வேயை வீழ்த்தியது இலங்கை

பங்களாதேஷில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் நேற்றைய போட்டியில் இலங்கை அணி ஸிம்பாப்வேயை 130 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் 84 ஓட்டங்களிற்கு நான்கு விக்கெட்டுகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்த போதிலும் ஜெகான் முபாரக், ஆங்லோ மத்யூஸ் ஆகியோரின் நிதான ஆட்டம் காரணமாக 50 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களை பெற்றது.

சனத் ஜெயசூரிய, உபுல் தரங்க ஜோடி முதலாவது விக்கெட்டிற்காக 51 ஓட்டங்களை பெற்றபோதிலும் ஜெயசூர்ய ஆட்டமிழந்த பின்னர் இலங்கை அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுகளை இழந்தது.

ஸிம்பாப்வேயின் ஈ.சி. ரைய்ன்ஸ் பேர்ட் தொடர்ச்சியாக மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

உபுல் தரங்க 43 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்ததை தொடர்ந்து இணைந்த முபாரக்கும், மத்யூஸும் நிதானமாக துடுப்பெடுத்தாடினர். ஓட்ட எண்ணிக்கை 166 ஆக காணப்பட்டவேளை, முபாரக் ஆட்டமிழந்தார். பின்னர் மத்யூஸ் - உடன் ஜோடி சேர்ந்த தில்லான் துஷார இரு சிக்ஸர்களின் உதவியுடன் 28 ஓட்டங்களை பெற்று இலங்கை அணி 200 ஓட்டங்களை கடக்க உதவினார்.



ஆட்டநாயகன் விருதுடன் இலங்கை வீரர் அங்லோ மத்யூஸ்

அங்லோ மத்யூஸ் தனது முதலாவது அரை சதத்தை பெற்று ஆட்டமிழக்காமலிருந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸிம்பாப்வே அணி 28 ஓவர்களில் 80 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பந்து வீச்சில் நுவான் குலசேகரவும், அஜந்த மெண்டிஸும் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஒருநாள் போட்டியில் மிக வேகமாக 50 விக்கெட்டுகளை வீழ்த்திய சாதனையை மென்டிஸ் ஏற்படுத்தியுள்ளார். இவர் 19 ஒருநாள் போட்டிகளில் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். போட்டியின் ஆட்டநாயகனாக அங்லோ மத்யூஸ் தெரிவு செய்யப்பட்டார்.

ஏற்கனவே, ஸிம்பாப்வே முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷை வீழ்த்தியிருந்தது என்பது தெரிந்ததே. முதல் சுற்றில் பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டம் எஞ்சியுள்ளது.

## ஆஸி ஓபன் டென்னிஸிலிருந்தும் விலகினார் மரியா ஷரபோவா

சிட்னி, ஜன. 13

அடுத்த வாரம் தொடங்கவுள்ள அவுஸ்திரேலிய் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியில் இருந்து நடப்பு சாம்பியன் மரியா ஷரபோவா (ரஷ்யா) விலகினார்.

பிரபல டென்னிஸ் போட்டிகளில் ஒன்றான ஆஸி. ஓபன், மெல்போர்ன் நகரில் 19ஆம் திகதி தொடங்குகிறது. மகளிர் ஒற்றையர் பிரிவில் கடந்த ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற ரஷ்ய வீராங்கனை ஷரபோவா, இந்த ஆண்டும் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.

தோள்பட்டை காயத்தால் அவதிப்படும் அவர், கடந்த ஆண்டு பல போட்டிகளில் இருந்து விலகினார். இந்த நிலையில், இன்னும் முழு உடல்தகுதி பெறாததால் அவுஸ்திரேலிய ஓபன் போட்டியில் இருந்து தாம் விலகுகின்றார் என அவர் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

## இங்கிலாந்து அணித்தலைவராக மீண்டும் வர பீற்றர்சன் விருப்பம்

லண்டன், ஜன.13

இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு மீண்டும் தலைவராக வரத் தாம் விரும்புகின்றார் எனப் பீற்றர்சன் கூறியுள்ளார். இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவர் கெவின் பீற்றர்சன், பயிற்சியாளர் பீற்றர் மூர்ஸ் இடையிலான கருத்துவேறுபாடு, வாகனை அணியில் சேர்க்கும் விவகாரத்தில் மோதலாக வெடித்தது. இதையடுத்து பீட்டர்சன் தனது பதவியை துறந்தார். பயிற்சியாளர் மூர்ஸ் நீக்கப்பட்டார். தற்போது புதிய அணித்தலைவராக ஸ்டிராஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். பயிற்சியாளர் தேடுதல் வேட்டையைத் தொடங்கியுள்ளது இங்கிலாந்து.

இந்த நிலையில் 5 மாதம் மட்டுமே அணியின் தலைவராக இருந்த பீற்றர்சன் இந்த விவகாரம் குறித்து அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

அணித்தலைவர் பதவியை நான் ஒரு போதும் இராஜினாமா செய்யவில்லை. இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு நான் அனுப்பிய ஈ-மெயிலில், ''பீற்றர் மூர்ஸ் பயிற்சியாளராக இருந்தால், மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் இங்கிலாந்துக்கு அணிக்கு என்னால் தலைமை ஏற்றுச் செல்ல இயலாது'' - என்றுதான் கூறியிருந்தேன். ஆனால் நான் ஏன் பதவி இறக்கம் செய்யப்பட்டேன் என்பதற்கான காரணம் இதுவரை எனக்கு தெரியவில்லை.

இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்து நான் செய்யவேண்டிய பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. எனவே மீண்டும் அணியின் தலைவராக விரும்புகிறேன்.

- இவ்வாறு பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

## முதலாவது 'ருவன்ரி - 20' ஆட்டம்:

## அஸி. அணிக்கு அசத்தல் வெற்றி! துவண்டது தென்னாபிரிக்கா!!



டேவிட் வார்னரின் அதிரடியான ஆட்டம்

மெல்போர்ன், ஜன. 13

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ருவன்ரி - 20 போட்டியில் அவுஸ்திரேலிய அணி 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி இரண்டு போட்டிகள் கொண்ட ருவன்ரி - 20 தொடரில் விளையாடுகிறது. மெல்போர்னில் நேற்றுமுன்தினம் முதலாவது ருவன்ரி - 20 போட்டி நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாட்டத்தை தெரிவுசெய்தது.

முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு, ஆரம்ப வீரர் மார்ஷ் (9) ஏமாற்றினார். அடுத்து வந்த பொண்டிங்குடன் ஜோடி சேர்ந்த அறிமுக வீரர் டேவிட் வார்னர், மின்னல் வேக ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தென்னாபிரிக்க பந்தில் சிக்சர் மழை பொழிந்த இவர் அரைச் சதம் கடந்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த பொண்டிங் (21) ஏமாற்றினார். திறமையாக ஆடிய வார்னர் 43 பந்தில் 6 சிக்சர், 7 பவுண்டரி உட்பட 89 ஓட்டங்களை எடுத்து சதமடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

அடுத்து வந்த வீரர்கள் ஓரளவு ஓட்டங்கள் சேர்க்க, அவுஸ்திரேலிய அணி 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 182 ஓட்டங்களை எடுத்தது. ஸ்டைன் 3 விக்கெட் வீழ்த்தினார்.

கடின இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணியின் கிப்ஸ் (0), காலிஸ் (4), டிவிலியர்ஸ் (0) உள்ளிட்ட முக்கியமான ஆட்டநாயகர்கள் சிறப்பாக ஆடவில்லை. அடுத்து வந்த டுமினி பொறுப்புடன் ஆடி ஓட்டங்கள் சேர்த்தார். இறுதிவரை போராடிய இவர் 48 பந்தில் ஒரு சிக்சர், 9 பவுண்டரி உட்பட 78 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற, தென்னாபிரிக்க அணி 18 ஓவரில் 130 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

# பாகிஸ்தானில் தீவிரவாதிகள் தொடுத்த பெரும் எடுப்புத் தாக்குதல் முறியடிப்பு

இஸ்லாமாபாத், ஜன. 13

''ஆப்கான் எல்லையை ஒட்டிய பாகிஸ்தான் பழங்குடி இன மக்கள் வாழும் பிராந்தியத்தில் அரசுப் படைக்கு எதிராக சுமார் 600 தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டது. இரு சாராருக்குமிடையே மூண்ட சண்டையில் 40 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள்'' என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

'' எல்லை அருகிலுள்ள சோதனைச் சாவடி மீதும், இராணுவ முகாம் மீதும் ஏக காலத்தில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மூர்க்கமான தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இவர்களில் பெருந்தொகையானோர் ஆப்கானிலிருந்து வந்தவர்கள்'' - என்றும் அவர்கள் பி.பி.ஸிக்கு விவரித்தார்கள்.

மொஹ்மாக் என்னுமிடத்தில் இத்தீவிரவாதிகள் இத்தாக்குதல்களை மேற்கொண்டார்கள். படையினரால் இவை முறியடிக்கப்பட்டன. இதற்குப் பின்னர் தீவிரவாதிகள் பதுங்கியிருந்தவாறு தொடர் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இரு சாராருக்குமிடையிலான சண்டையில், ஆறு இராணுவ வீரர்கள் பலியானார்கள். ஏழுபேர் காயமடைந்தனர் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பழங்குடி இன மக்கள் வாழும் பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியங்களில் ஆயிரக்கணக்கான படை வீரர்களை பாகிஸ்தான் கடமையில் ஈடுபடுத்தியுள்ளது. எனினும் இவர்களால் ஆப்கானிஸ்தானிலிருந்து ஊடுருவும் தலிபான் தீவிரவாதிகளையும் அல் - குவைதாதீவிரவாதிகளையும் முற்றுமுழுதாகத் தடுக்க முடியவில்லை என மேற்கத்தேய ஆப்கானிய அதிகாரிகள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

ஆப்கானுடன் ஒட்டிய பாகிஸ்தான் எல்லைப்பிராந்தியங்களுக்குள் ஊடுருவி தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ளார்கள். அவர்களின் முகாம்களும் இங்கு இயங்குகின்றன. எனினும் இவற்றை நிர்மூலமாக்கவும் தீவிரவாதிகளை வெளியேற்றவும் பாகிஸ்தான் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் குறைகூறி வந்துள்ளார்.

அத்துடன் இப்பிராந்தியங்களிலிருந்து தாக்குதல்களை மேற்கொள்ள ஆப்கானுக்குள் ஊடுருவும் தீவிரவாதிகளையும் தடுக்க, பாகிஸ்தான் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறி வருகின்றது என்றும் கர்சாய் சுட்டிக் காட்டி வந்துள்ளார்.

இக்குற்றச்சாட்டுகளை பாகிஸ்தான் நிராகரித்து வந்துள்ளது. மொஹ்மாந் எல்லைப் பகுதியிலுள்ள பஜனர் பிராந்தியத்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக பாரிய அதிரடித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. போராளிகளின் முகாம்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. எமது அதிரடி நடவடிக்கைகள் நீடிக்கின்றன என்றும் பாகிஸ்தான் ஆப்கானுக்கு விளக்கமளித்துள்ளது.

கடந்த வருட ஓகஸ்ட் முதல் ஆப்கானை ஒட்டிப் பாகிஸ்தான் எல்லைப்பிராந்தியங்களில் தலிபான்களினதும் அல் - குவைதாவினதும் பயிற்சி முகாம்கள், பதுங்கு குழிகள், தங்குமிடங்கள் ஆகியன பெருமளவில் அழித்தொழிக்கப்பட்டுள்ளன. 1,500 இற்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள் என எல்லைப்பிராந்திய பாகிஸ்தான் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரி, ஆப்கானின் தலைநகரான காபூலுக்கு விஜயம் செய்தார். அப்போது ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்க்கும், பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரிக்குமிடையே நடைபெற்ற சந்திப்பிலும் தீவிரவாதத்தைத் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்து மிக விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையே 'புதிய உறவு' ஏற்பட்டது. இதன்படி தீவிரவாதத்தையும், தீவிரவாதிகளையும் முறியடிக்க இரு நாடுகளும் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையொன்றும் ஏற்பட்டது.

## காஸாவில் 900 பேர் கோரப் பலி! தொடர்கிறது இஸ்ரேல் தாக்குதல்

டெல் அவிவ், ஜன. 13

காஸா துண்டத்தின் மீது ஞாயிற்றுக் கிழமை இரவும் இஸ்ரேல் விமானப்படை ஜெற் விமானங்கள் உக்கிரமான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. அதேவேளை, காஸாவில் தரைமார்க்கமான தாக்குதல்களில் இஸ்ரேலின் துணைப் படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

காஸா மீது சனிக்கிழமை இஸ்ரேல் 60 வான்வழித் தாக்குதல்களையும், ஞாயிற்றுக் கிழமை 12 வான்வழித் தாக்குதல்களையும் நடத்தியுள்ளது. நேற்று திங்கட்கிழமை காலை காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ஒரு ரொக்கெட் தாக்குதல் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 17 நாள்களாக காஸா மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில் பாரிய அளவில் உயிரிழப்புகளும், உடைமைகள் அழிப்புகளும் நேர்ந்துள்ளன. இதுவரை ஏறத்தாழ 900 காஸா மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என பலஸ்தீன மருத்துவமனை வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. எனினும், தனது தரப்பில் 13 பேர் மாத்திரமே கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

# ஆபிரகாம் லிங்கன் பயன்படுத்திய பைபிளில் சத்தியப் பிரமாணம்

## ஒபாமா பதவியேற்பில் விசேடம்

வாஷிங்டன், ஜன. 13

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் பயன்படுத்திய பைபிளை வைத்தே பராக் ஒபாமா பதவியேற்கவுள்ளார். ஆபிரகாம் லிங்கன் பதவியேற்றுக் கொண்ட பின்னர் எவ்வித மதிய உணவு உட்கொண்டாரோ, அதேபோல் தானும் சாப்பிட ஒபாமா முடிவெடுத்துள்ளார்.

ஆபிரகாம் லிங்கனின் வழியை பின்பற்றி வருபவர் பராக் ஒபாமா. இதனால் அவரது வழியிலேயே தானும் பதவியேற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளார். அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்வாகியுள்ள ஒபாமா எதிர்வரும் 20 ஆம் திகதி முறைப்படி பதவியேற்றுக் கொள்ளவுள்ளார். பதவியேற்பு விழா மிகப் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பதவியேற்றுக்கொண்ட பின்னர் ஒபாமா தனது மதிய உணவை நாடாளுமன்றக் குழுவினருடன் சேர்ந்து உட்கொள்வார். இந்த விருந்து நிகழ்ச்சியில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி, அவரது குடும்பத்தார், உச்சநீதிமன்ற நீதிபதிகள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உட்பட 200க்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். ஒபாமா தனது குடும்பத்தாருடன் ஞாயிற்றுக்கிழமை ஆபிரகாம் லிங்கனின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார். அப்போது செய்தியாளர்களிடம் கூறுகையில், ''என்னைக் கவர்ந்த மாபெரும் தலைவர் ஆபிரகாம் லிங்கன்'' என அவர் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொண்டார்.

## பிஜியில் புயல்; 6 பேர் பலி

சுவா, (பிஜி) ஜன. 13

பிஜியில் புயலுடன் கூடிய மழையால் கடும் வெள்ளப்பெருக்கெடுத்துள்ளது. இதில் 6 பேர் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதையடுத்து, அரசு அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது. தேசிய பேரிடர் மேலாண்மை அலுவலகத்தின் பரிந்துரையை ஏற்று அவசர நிலை பிரகடனத்துக்கான ஆணையை இடைக்கால பிரதமர் பைய்னிமராமா பிறப்பித்தார்.

நாடு முழுவதும் வெள்ளப்பெருக்கெடுத்துள்ளமையால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சூழலை சமூக விரோதிகள் சாதகமாகப் பயன்படுத்திக் குற்றச் செயல்களில் ஈடுபட முயலலாம். இதைத் தவிர்த்து, மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் பொருட்டே அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டது என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் மீட்புப் பணியும் முழுவீச்சில் நடந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போரை நிறுத்தும்படி இலங்கையிடம் இன்னும் வெளிப்படையாகக் கூறவில்லை

# தமிழகத்தவரின் முயற்சிகளுக்கு மத்திய அரசு மரியாதை தரவில்லை என ராமதாஸ் விசனம்!



சென்னை, ஜன. 13

இலங்கை அரசு யுத்த நிறுத்தம் செய்துவிட்டுப் பேச்சுகளைத் தொடங்கவேண்டும் என்று அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் வலியுறுத்தி உள்ளன. ஆனால், இலங்கை அரசு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இந்திய மத்திய அரசு இதுவரை வெளிப்படையாகக் கூறவேயில்லையே!

- இப்படி விசனத்துடன் சுட்டிக்காட்டியிருக்கின்றார் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ்.

டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், திராவிட கழகத் தலைவர் கி. வீரமணி ஆகியோர் முதலமைச்சர் கருணாநிதியை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று சந்தித்துப் பேசினர்.

நேற்றுக்காலை 9.30 மணிமுதல் 10.25 மணிவரை இந்தச் சந்திப்பு நடந்தது. பின்னர் வெளியே வந்து செய்தியாளர்களிடம் பேசியபோதே ராமதாஸ் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் மூன்று பேரும் கையெழுத்திட்டு முதலமைச்சர் கருணாநிதியிடம் ஒரு மனுக் கொடுத்துள்ளோம்.

இலங்கையில் ஒட்டுமொத்த தமிழ் இனத்தையும் இலங்கை அரசு அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியில் அமைந்தபோது தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க. உள்ளிட்ட 15 கட்சிகள் அதில் இடம்பெற்றன.

அப்போது ஒரு குறைந்த பட்ச செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. இதில் இலங்கைத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதற்கான அமைதிப் பேச்சுகள் நடைபெறுவதற்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, ஆதரவாக செயல்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் 15 கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்தும் போட்டுள்ளோம். இதை முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டினோம்.

ஆனால் தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தத் தமிழர்களும் இதுவரை இவ்விடயத்தில் ஒன்றுபட்டு எடுத்த அனைத்து முயற்சிகளுக் கும் மரியாதை இல்லை.

இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும் என்று மத்திய அரசு இதுவரை வெளிப்படையாகச் சொல்லவில்லை. அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் எல்லாம் போரை நிறுத்திவிட்டு பேச்சைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளன.

**போர் நிறுத்தத்தை மீண்டும் வலியுத்துமாறு கூறியுள்ளோம்**

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது என்று பலமுறை மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் நாடாளுமன்றத்தில் பேசியும் உள்ளனர்.

7 கோடி தமிழக மக்களும் எடுத்த முயற்சிகளுக்கு மத்திய அரசு செவிசாயக்கவில்லை. நாங்கள் கருணாநிதியிடம் ஒரு வேண்டுகோள் வைத்துள்ளோம். மீண்டும் உடனடியாக மத்திய அரசிடம் பேசுங்கள், போர்நிறுத்தத்துக்கு வலியுறுத்துங்கள் என்று கூறினோம். அவரும் இன்று தாம் பேசுவார் எனச் சொல்லியிருக்கிறார். அதை ஓர் அறிக்கையாக வெளியிடவும் கேட்டுக் கொண்டுள்ளோம்.

- இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார்.

திருமாவளவன் கூறும்போது, "இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறினால், வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதையும் மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லும்படி கூறியுள்ளோம்." - என்றார்.

கி.வீரமணி கூறுகையில், "இலங்கையில் 4 லட்சம் அப்பாவித் தமிழர்கள் முல்லைத் தீவில் பாதுகாப்பு இல்லாமல் உள்ளனர். உடனடியாகப் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும். தமிழர்களை அழிக்கும் முயற்சிக்குத் துணை போவதாக இந்திய அரசின் நிலைப்பாடு இருக்கக்கூடாது. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்." - என்றார்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர்கள் ஆற்க்காடு வீராசாமி, துரைமுருகன், பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, ஏ.கே. மூர்த்தி எம்.பி. ஆகியோர் உடன் இருந்தனர்.

## மூத்த எழுத்தாளர் புலோலியூர் தம்பையா காலமானார்



வடமராட்சிஜன.13

மூத்த எழுத்தாளர் புலோலியூர் க.தம்பையா தமது 72 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இலக்கியத் துறையில் ஈடுபட்டிருந்த இவர் 2008ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருதைப் பெற்றிருந்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், நகைச்சுவை நாடகங்களை இவர் படைத்துள்ளார். இவரது சிறுகதைகள் பலவும் பரிசில்களைப் பெற்றவை. அழியும் கோலங்கள்,ஐம்பதிலும் ஆசை வரும் ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டவர்.

புற்றளை, புலோலியைச் சேர்ந்த இவர் நில அளவைத் திணைக்களத்தில் படவரைஞராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்.

கடந்த பத்து நாள்களுக்கு மேலாக சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று அங்கு காலமானார்.

இவரது 'சிநேகிதி' சிறுகதை கடந்த டிசெம்பர் 28 ஆம் திகதியன்று ஞாயிறு உதய னில் பிரசுரமாகியிருந்தது.

(அ-236)

# மக்கள் இல்லாது வெறிச்சோடிக் கிடந்த கிளிநொச்சியே படைத்தரப்பின் வசம்

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கூறுகிறார்

இலங்கையில் கிளிநொச்சியை விட்டு வெளியேறிய தமிழ் மக்கள் தற்போது காடுகளில் வசித்து வருகின்றனர். இதில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோர் அடங்குவர். மக்கள் இல்லாத கிளிநொச்சியையே அரசு பிடித்துள்ளது.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பி. நடேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழகத்தில் வெளிவரும் தினமணியின் கேள்விகளுக்கு நடேசன் அளித்துள்ள சிறப்பு பேட்டி வருமாறு:

*கேள்வி:* - மக்கள் யாரும் இல்லாத, வெறிச்சோடிக் கிடந்த கிளிநொச்சியைத் தான் இலங்கை இராணுவம் பிடித்துள்ளது என்கிறார்களே, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை கிளிநொச்சியிலிருந்து அழைத்துச் செல்லும் பணியை எவ்வளவு நாள்களாக செய்தீர்கள்?

*பதில்:* கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புகளை தமிழ் மக்கள் சந்தித்து வருகிறார்கள். அதுபோன்ற நேரங்களிலும் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உடுத்திய உடையோடு, எல்லா உடைமைகளையும் விட்டுவிட்டு, அவர்கள் இடம்பெயர்ந்த வரலாறு பல உண்டு. வன்னி நிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கையை எங்கள் மக்கள் சந்திப்பதும் இது முதல் தடவையல்ல. இலங்கை இராணுவம் ஆக்கிரமித்த பகுதிகளில் சிங்களப் படையினர் எத்தகைய சித்திரவதைகள், படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள் செய்வார்கள் என்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

ஆகவே இராணுவம் எப்போது வரும்? எவ்வாறு வரும்? என்பதை எங்கள் மக்கள் நன்கு அறிவார்கள். அதற்கேற்ப இம்முறை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஓரிரு நாள்களுக்குள்ளேயே முழு உடைமைகளுடனும், மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவர்கள் எதிர்பார்த்த சகல உதவிகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

*கேள்வி:* அவர்கள் காடுகளில் தங்கியுள்ளனர் எனவும், உடல் நிலை மோசமாகி தினமும் பலர் உயிரிழக்கின்றனர் எனவும் கூறப்படுகிறதே, அது உண்மையா?

*பதில்:* இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தியுள்ளோம். சிறு கிராமங்கள், காடுகள் என எல்லா இடங்களிலும் குடியேற்றியுள்ளோம். இலங்கை அரசின் பொருளாதாரத் தடை காரணமாக மருந்துப் பொருள்கள் கிடைக்கவில்லை. எனவே பாம்புக் கடிகள், தொற்றுநோய்கள் என எல்லா கொடுமைகளையும் எமது மக்கள் சந்தித்து வருகின்றனர். மிகவும் சிரமப்பட்டு அவர்களை பாதிப்பிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

*கேள்வி:* ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குடில்களில் வசிக்கிறார்களா? வெட்ட வெளியில் உள்ளார்களா? அவர்களுக்கு உணவு, உடை, குடிதண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைகளை எவ்வாறு அளித்து வருகிறீர்கள்?

*பதில்:* ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தற்போது குடிசைகளிலும், தாற்காலிக கூடாரங்களிலும், மர நிழல்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு மின்சாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை. குப்பி விளக்கு களிலும், காட்டில் நெருப்புகளை மூட்டியும் மக்கள் தமக்கு வேண்டிய வெளிச்சத்தைப் பெறுகின்றனர். தற்காலிக கிணறுகள், குளங்களிலிருந்து எடுக்கப்படும் நீரை, எமது சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்படி கொதிக்க வைத்து பருகி வருகின்றனர். உணவைப் பொறுத்தமட்டில், ஐ.நா. சபையின் உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படும் உணவுகளையும், உள்ளூர் உற்பத்திகளில் சேகரித்து வைத்த உணவுகளையும் உண்டு வருகின்றனர். பெரிய சிரமங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் எங்கள் மக்கள் உணவு, உடை, குடிதண்ணீர் ஆகியவற்றைப் பெற்று வருகின்றனர்.

**குண்டு வீச்சுக்களாலேயே கட்டடங்கள் தரை மட்டம்**

*கேள்வி:* கிளிநொச்சியில் தற்போது கட்டடங்கள் அனைத்தும் தரைமட்டமாகக் கிடக்கின்றன. மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் எதுவும் இல்லை. கிளிநொச்சியை காலி செய்யும் முன் நீங்களே அழித்துவிட்டு சென்றதாகக் கூறப்படுகிறதே. இது உண்மையா?

*பதில்:* இது முற்றிலும் பொய்யான பிரசாரமாகும். இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சுக்களாலும், ஷெல் வீச்சுக்களாலும் கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன. நேரில் சென்று பார்ப்பவர்களுக்கு இது நன்றாகப் புரியும்.

*கேள்வி:* - தமிழ் மக்கள் கிளிநொச்சியை விட்டு முன்னரே வெளியேறி விட்டார்கள் என்றால், தமிழக அரசு அனுப்பிய நிவாரணப் பொருள்கள் யாருக்கு போய்ச் சேர்ந்தது?

ப: முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சியை ஒட்டிய பிரதேசங்களில், மக்கள் இடம்பெயர்ந்து சென்று வாழ்கின்ற இடங்களில் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினரால் நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. எமது பிரதேசத்தில் இயங்குகின்ற செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் எங்களுடன் மிகவும் நெருக்கமாகவும், அந்நியோன்னியமாகவும் செயற்பட்டு வருகின்றனர். இதனால் மக்களுக்கு நிவாரணப்பொருள்களை எளிதாக விநியோகிக்க முடிகிறது.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் உடல் நிலை மோசமாக உள்ளது எனவும், அவர் விரைவில் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வார் என்றும் தொடர்ந்து செய்திகள் வருகின்றன. உண்மை நிலை என்ன?

*பதில்:* அவர் மிகவும் தேக ஆரோக் கியத்துடன் இருந்து போராட்டத்தை வழிநடத்தி வருகிறார். இலங்கை அரசுக்கு ஆதரவான ஊடகங்களே இவ்வாறு பொய்யான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன.

*கேள்வி:* - இலங்கை இராணுவத்துக்கு இந்திய இராணுவம் உதவி வருகிறது எனக் கூறப்படுவது உண்மையா?

*பதில்:* பல ஊடகங்கள், குறிப்பாக கொழும்பு ஊடகங்கள் இவ்வாறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

*கேள்வி:* - கிளிநொச்சியை மீண்டும் மீட்போம் எனக் கூறுகிறீர்கள். கிளிநொச்சியிலிருந்து இலங்கை இராணுவத்தை விரட்டுவது அவ்வளவு எளிதானதா?

*பதில்:* இங்குள்ள தமிழ் மக்கள் அனைவரும் எங்களுடன் உள்ளனர். அது மட்டுமல்ல. ஒட்டுமொத்த உலகத் தமிழ் இனத்தின் தார்மீக ஆதரவும் எங்களுக்கு உள்ளது. இதுவே எங்கள் பலம். இந்த பலத்தின் மூலம் நாங்கள் இழந்த ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீட்போம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

*கேள்வி:* - இலங்கை இனப் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகளின் அணுகுமுறை மற்றும் செயல்பாடு குறித்து தங்கள் கருத்து என்ன?

*பதில்:* எங்கள் விடுதலைப் போராட்டத்திற்காக அரசியல் வேறுபாடுகளை மறந்து, குரல் கொடுப்பது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், எழுச்சியையும் கொடுக்கின்றது.

**இந்தியாவின் வரலாற்று ரீதியான நண்பர்கள் நாங்களே**

*கேள்வி:* - இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து தங்கள் கருத்தென்ன?

*பதில்:* இந்திய அரசினுடைய, இந்திய மக்களுடைய வரலாற்று ரீதியான நண்பர் யார்? பகைவன் யார்? என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் தான் இந்தியாவின் வரலாற்று ரீதியான நண்பர் என்பதனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவுக்கு நம்பிக்கைக்கு கந்த நண்பனாக இலங்கை அரசு என்றைக்குமே நடந்து கொள்ளவில்லை. இதற்குப் பல்வேறு ஆதாரங்களைக் கூறமுடியும்.

*கேள்வி:* - போர் நிறுத்த உடன்படிக்கை முறிய விடுதலைப் புலிகளே காரணம் என இங்குள்ள காங்கிரஸ் கட்சியினர் கூறி வருவது உண்மையா?

*பதில்:* போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்ததற்கு இலங்கை அரசே காரணம். போர் நிறுத்தத்திலிருந்து விலகுவதாக அவர்கள்தான் முதலில் அறிவித்தனர்.

நாங்கள் ஒருபோதும் அவ்வாறு செய்யவில்லை. இப்போதும் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்று உருவானால் அதனை வரவேற்க நாங்கள் தயாராக உள்ளோம்.

*கேள்வி:* - ஈழத் தமிழர் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வை எட்ட முடியும் என நம்புகிறீர்கள்? அதற்குத் தங்களிடம் எத்தகைய திட்டம் உள்ளது?

*பதில்:* எமது மக்களின் அரசியல் விருப்பங்களை நிறைவு செய்யக்கூடிய அரசியல் தீர்வினையே நாங்கள் விரும்புகின்றோம். இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே போன்ற நாடுகள் அரசியல் பேச்சுகள் வழியாகவே இனப் பிரச்னைக் கான தீர்வை காண முடியும் என கூறி வரும் நேரத்தில், இலங்கை அரசு எங்கள் மீது தடை விதித் துள்ளது.

இலங்கை அரசு இராணுவத் தீர்வை நோக்கிச் செல்கின்றது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இது சிங்கள அரசின் அப்பட்டமான தமிழின விரோதப் போக்கிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்- என்றார் நடேசன்.

## மரண அறிவித்தல்

### அழகரத்தினம் கனகபூரணம்

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் கனகபூரணம் நேற்று(12.01.2009)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அழகரத்தினத்தின் அன்பு மனைவியும் மகாலட்சுமி, காலஞ்சென்ற ராலட்சுமி மற்றும் செல்வரத்தினம், கோமளேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும மகாதேவன்(கொக்குவில்), சிவராசா, கனேந்திரன், தெய்வநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சுபஸ்த்திகா(சுவிஸ்), பிறேந்தன் (சுவிஸ்), சுகித்தா, சுவர்ணா, சிவகுமார், சசிகுமார், ஜெயக்குமார், கௌசிகா, சுகுமார், ரூபகாந்தன், ஜெயக்காந்தன், தனுஜா, சிவகாந்தன், சிறிகாந்தன், சிவரஞ்சினி (லண்டன்), சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் சாருஜன், சதுர்சன், சாருஜா, சுபாஸ்கரன், நிசாகரன், சரணியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(13.01.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு சின்னத்தா மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

தகவல்:
க.ஜெயக்காந்தன் (பேரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவ பயிலுநர் நேர்முகப் பரீட்சை கொழும்பில்

இலங்கை வங்கி முகாமைத்துவ பயிலுநர் நேர்முகப் பரீட்சைக்கு ஏற்கனவே அழைக்கப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் மார்ச் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என வங்கியின் தலைமையகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

## பிரணாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினர் ஈட்டி வரும் வெற்றிகளின் பின்னரான நாட்டின் நிலைமை ஆகியன தொடர்பாக அவர் இங்குபேச்சுக்களை நடத்துவார் என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வாரத்தின் ஆரம்பத்தில் வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனும் கொழும்பு வருகிறார். பாதுகாப்புத் துறைச் செயலாளர் விஜய்சிங் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் சகிதம் அவர் இலங்கை வருவார் என்றும் வெளிவிவகார அமைச்சு நேற்றுமாலை அறிவித்தது. (அ-1)

## ஷெல், பீரங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4.30 மணியளவில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் நால்வர் படுகாயமடைந்தனர்.

இதே வேளை வட்டக்கச்சி பகுதி மீதுமேற்கொள்ளப்பட்ட பீரங்கித்தாக்குதலில் 75 வயதுடைய வயோதிப் பெண் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகிலும் பல பீரங்கிகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் மக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்து கொண்டிருப்பதனால் வீதிகளில் சனநெரிசல் அதிகரித்துள்ளது. அங்கு பீரங்கிகள் வீழ்ந்து வெடிப்பதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று அந்த இணையத்தளங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## மனோ கணேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளானது. வாகனம் கடுமையான சேதத்திற்குள்ளான போதிலும் மனோ கணேசன் எம்.பி. சிறுகாயங்களுடன் உயிராபத்தின்றித் தப்பினார்.

ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் அஜந்தா மண்டபத்தில் இடம்பெற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் நுவரெலியா மாவட்ட முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு விட்டுக் கொழும்பு திரும்பிய வேளையிலேயே இவ்விபத்து நடைபெற்றுள்ளது. (அ)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தினரும் கொடிகாமம் மத்தி கிராம சேவையாளரும் ஏற்பாடு செய்துள்ளனர்.

சுகவீனம் அடைந்தவர்களுக்கான சிகிச்சைகளை மிருசுவில் வைத்திய நிலைய வைத்தியர் குழு வழங்கிவருகிறது.

அவர்களின் சுகாதாரத் தேவைகளை சீராக்கும் பணியில் சாவகச்சேரி பிரதேசசபையின் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் 83 குடும்பங்கள் கொடிகாமத்துக்கு வரவிருப்பதாக அங்கு தங்கியுள்ளவர்கள் தெரிவித்தனர். இதற்கிடையில், ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்ந்தவர்களில் 53பேர் சாவகச்சேரி நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு கோப்பாய் இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை- கொடிகாமத்தில் தங்கியுள்ளவர்களை தென் மராட்சி பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீநிவாசன் நேற்றுப் பார்வை யிட்டார்.

### கச்சாயில் நேற்று ஊர்வலம்

மேலும் வன்னியில் உள்ள மக்களை இராணுவக்கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வருவதற்கு அனுமதிக்கக் கோரி ஊர்வலம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

கச்சாயில் ஆரம்பமான ஊர்வலம் மிருசுவிலில் முடிவடைந்து அங்கு கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

(அ-1-131-207)

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் பின்னர் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியவை வருமாறு:-

''இலங்கையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் தமிழர்கள் மீதான தாக்குதல் நெஞ்சை உலுக்குவதாக உள்ளது. இது தொடர்பாக அங்கு நடைபெறும் போரை உடனே நிறுத்துமாறு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்று அவர்கள் மூன்று பேரும் (ராமதாஸ், வீரமணி, திருமாவளவன்) என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா ஆகியோரிடம் இது குறித்துப் பேசி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

''பிரதமர், காங்கிரஸ் தலைவி ஆகியோருடன் இன்று பேசி இலங்கையில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு அமைதியை ஏற்படுத்தினால் அது இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் என்று எடுத்துரைப்பேன்.'' - என்றார் தமிழக முதல்வர்.

''பிரதமரையும், காங்கிரஸ் தலைவியையும் புதுடில்லி சென்று அவர்களை நேரில் சந்திப்பீர்களா?'' - என்று கேட்ட போது, ''இப்போது நேரடியாக சந்தித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. அவர்களிடம் தொலைபேசியிலேயே பேசுவேன்'' - என்று கருணாநிதி பதிலளித்தார்.

(அ-சி)

(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது நேற்றுக்காலை 8.15 மணியளவில் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்களும், இரணைமடுகுளத்திற்கு வடக்கே சுமார் 2 கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப்புலிகள் ஒன்றுகூடும் தளம் மீது காலை 9 மணியளவில் ஜெற் விமானங்களும் வான் தாக்குதல்களை நடத்தின என்றும் இரணைமடுப்பகுதியை நோக்கி முன்னேறிச்செல்லும் 57 ஆவது படைத்தரப்புக்கு உதவியளிக்கும் நோக்கிலேயே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் - விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார்.

(அ-சி)

## லஸந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதிகளும் கறுப்புத் துணிகளால் தங்களது வாய்களைக் கட்டி லஸந்தவின் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஊர்வலத்தில் கலந்துகொண்ட சட்டத்தரணிகள் அவர்களின் இடது கைகளில் கறுப்புப் பட்டிகளைக் கட்டி எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

அதேபோல் அநேகமானோர் கறுப்பு பலூன்கள், கறுப்புக் கொடிகள் மற்றும் கண்டன வாசகங்கள் அடங்கியிருந்த சுலோகங்கள் போன்றவற்றை ஏந்தியும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பத்தரமுல்லையில் உள்ள லஸந்த விக்கிரமதுங்கவின் இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த லஸந்தவின் பூதவுடல், நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் நாரஹேன்பிட்டியில் உள்ள தேவசபை தேவாலயத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

தேவாலயத்தில் வைத்து சமயக்கிரியைகள் நடத்தப்பட்டன. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஐ.தே.க. எம்.பிக்கள் ரவி கருணாநாயக்க, ஜோன் அமரதுங்க, ஜோன்ஸன் பெர்னாண்டோ உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் தேவாலயத்தில் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பிறகு அங்கிருந்து பொரளைக்கனத்தை மயானத்தை நோக்கி அன்னாரின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

லஸந்த விக்கிரமதுங்க கல்வி கற்ற புனித பெனடிக்ற் கல்லூரியின் மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதை வழங்கினர்.

ஊர்வலத்தின் போது வீதியின் இரு பக்கங்களிலும் பெருந்திரளான மக்கள் கூடி நின்று அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

இதனால் பேஸ்லைன் வீதியில் சில மணிநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல அரசியல் தலைவர்களின் இரங்கல் உரையைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் மாலை 6.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.(அ-சி)

## பிரிட்டிஷ் பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றார்.

பிரிட்டிஸ் பிரதித் தூதுவர் நேற்று மாலை உதயன் அலுவலகத்துக்கும் விஜயம் செய்தார். அவருடன் தூதரகத்தின் அரசியல் அதிகாரியும் ஊடக அதிகாரியுமான நிருபன் முத்தையாவும் கூட வந்திருந்தார். (அ-சி)

## இந்தியா உடனடி...

எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றினர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் நடைபெறும் போரை உடனடியாக நிறுத்துவதற்கு உதவ வேண்டும் என்று தமிழக, மத்தியஅரசுகளிடம் கேட்கிறோம். அவ்வாறு நீங்கள் உதவாவிடில் அங்குள்ள தமிழர்கள் அழிந்தொழிவார்கள்.போரை நிறுத்தவும் சமாதானப் பேச்சுக்கு வழி செய்யவும் உடன் நடவடிக்கையில் இறங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கைப் படையினர் விமானத் தாக்குதல்களையும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களையும் தவறாது இடைவெளியின்றி அப்பாவித் தமிழ்மக்கள் மீது தொடுத்து வருகின்றார்கள்.

நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வரமுடியாத இயலாமையில் இலங்கை அரசு உள்ளது. அதனாலேயே அது தமிழர்களை இன அழிப்புச் செய்து வருகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிராகவேதான் போரை நடத்துவதாக அரசு கூறுகிறது. ஆனால் போரினால் உயிரிழப்போர் அப்பாவித் தமிழ் மக்களே.

இதனை நிறுத்த இந்தியா உதவாவிடில் இலங்கை அரசு தனது தமிழர் இன அழிப்பு நோக்கத்தில் நிச்சயம் வெற்றி காணும்.

தமிழினத்தை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்ற ஒரே நோக்குடன், இலங்கை அரசு போர் நடத்தி வருகிறது. இந்த யுத்தத்தில் முல்லைத்தீவில் மட்டும் 53 ஆயிரம் வீடுகள் அழிக்கப்பட் டிருக்கின்றன.

பாடசாலைகள், கோவில்கள், வைத்தியசாலைகள், அகதி முகாம்கள் போன்றன விமானங்கள் மூலம் குண்டு வீசித் தகர்க்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் உடைமைகள் முழுவதுமாக அழிக்கப்பட்டுவிட்டன. தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களும், முழு அளவில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இனவெறியுடன் இலங்கை அரசு நடத்தி வரும் தாக்குதல் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால், அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் தமிழர்கள் இருக்க மாட்டார்கள். ஒருவேளை ஒரு சிலர் உயிர்பிழைந்திருந்தாலும், அவர்கள் வாய்மூடி அடிமைகளாக இருக்க வேண்டும். இது தமிழகத்திற்கும், இந்திய அரசுக்கும் பெரும் மானக்கேடாகும்.

எனவே, இலங்கையில் போரை நிறுத்தி இந்திய அரசின் மேற்பார்வையில் தமிழக அரசு மூலமாக பேச்சு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அனைத்து உரிமை களையும் பெற வழிவகை செய்யப்பட வேண்டும். (அ-சி)

## மரண அறிவித்தல்

### சுப்பையர் சங்கரப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சங்கரப்பிள்ளை 12.01.2009 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் கடைசி மகனும் பூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் சாந்தரூபன்(சுவிஸ்), இரத்தினேஸ்வரன்(நோர்வே), கண்ணகி, முருகவேள் ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாயினி, சுபத்திரா, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பொன்னையா சின்னம்மா தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, கந்தையா, பாலசிங்கம், பொன்னம்மா மற்றும் பரமேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, வெற்றிவேலு, பொன்மலர், சிவபாதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகிழ்ராஜ், மதுராஜ், மதுசாலினி, கபில்ராஜ், ஹரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.01.2009) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் ஏழாலை வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாநிதி வீதி,
ஏழாலை வடக்கு.

தகவல்:
ச.முருகவேள் (மகன்).

Day Class

| LOGIC | தமிழ் | இந்து நாகரிகம் | கணக்கீடு |
|---|---|---|---|
| ஆரம்பம்: 16.01.2009 வெள்ளி 7am (புதன், வெள்ளி, சனி, ஞாயிறு) | திங்கள், செவ்வாய், வியாழன், காலை 8மணி | திங்கள், செவ்வாய், வியாழன், காலை 9மணி | கம்பனி ஆரம்பம்: 16.01.2009 வெள்ளி 7 மணி |
| P.கமல் | N.குழந்தை | S.ஜெயந்தகுமார் | S.துவா |

Special English Classes
Spoken With Grammar
2009 ற்கான பிரிவு III ஆரம்பம்
By: Mr.P.Ainkaran B.A (Hons) HNDip in English
ஆரம்பம்:- 17.01.2009 மாலை 4
''தாய் மனை'' வன்னிய சிங்கம் வீதி, இணுவில்.
பல்கலைக்கழக மாணவர்கள், வெளிவாரிப்பட்ட மாணவர்கள், தொழிநுட்பக் கல்லூரி மாணவர்கள், மற்றும் தொழில் தேடுவோர்களுக்கான விசேட பாடத்திட்டம் பங்கு பற்றல் மூலமான சிறந்த பயிற்சிகள்
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சூர்யா கிளினிக் - ஆவரங்கால்
வைத்திய நிபுணர்களின் சேவை
★ பெண்ணியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் - செவ்வாய்க்கிழமை 3.00 மணி
★ கண் வைத்திய நிபுணர் - புதன்கிழமை 3.30மணி
★ காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் - ஞாயிற்றுக்கிழமை 3.00 மணி
★ பொது வைத்திய நிபுணர்
முன் பதிவு செய்யும் இடங்கள்
1. சூர்யா மருந்தகம், பஸ்நிலையம், அச்சுவேலி.
2. சூர்யா மருந்தகம், பருத்தித்துறை ,வீதி புத்தூர்.

கற்சுமி வெளியீடு
கற்சுமி வெளியீடுகளை புதிதாகப் பெற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்க
பெற்றோர்/மாணவர்கள் பதிவு செய்யுங்கள்.
நாவலர் வீதி, யாழ்.

SUBRA (14)
பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான
Spoken English & Grammar
New Batch
By: Britto
★பல்கலைக்கழக வினாத்தாள்களும் கற்பிக்கப்படும்.
இரு இடங்களிலும்
15.01.2009
வட்டுக்கோட்டை 9.30 — சித்தங்கேணி 8.30

GVT - தையல் பயிற்சி
தையல் பயிற்சி நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத் திகதி 23.01.2009
பயிற்சி நெறி தொடக்கம் 01.02.2009
41, அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.